கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

ஆக்கியோன்:
சகோதரர்.
J.M. ரேஸ் பாண்டியன்
ஏல்பெத்தேல் ஜெப வீடு
தூத்துக்குடி - 3

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

B Baliyan Iram
Palayamcottai Convention
14.6.1981.

முன்னுரை

ிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்ற ந்த புத்தகத்தை எழுத இறைவன் இயேசு அருள் புரிந்தற்காக அவரை தோத்தரிக்கிறேன். நான் கிறிஸ்த்தவ பெற்றோருக்குப் பிறந்திருந்தாலும் ிஸ்துவுக்கு ஆகாதவனாக ஜீவித்து வந்தேன். ஆண்டவர் கிருபையாக னைச்சந்தித்து தமக்குஒரு சாட்சியாக்கி,கடந்த 18 வருஷமாக அவருக்கு ழுநேர ஊழியம் செய்யும் பாக்கியத்தை எனக்குஅளித்தார். கடந்த 18 ருஷமாக கிறிஸ்துவின் அன்பை என் அனுபவத்தில் ருசித்து வருகிறேன். னவே என் அருள்நாதர் இயேசுவின் அன்பை உலகத்திற்கு அறிவித்து வரை மகத்துவப்படுத்த வேண்டும் என்பதே என் ஒரே வாஞ்சை. ந்த ஆவலாலே இந்த சிறு புத்தகத்தை எழுதினேன். இதை எழுத ரம்பித்து வெளியிடுகிறவரைக்கும் இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதியாகிய த்தான் பல விதத்தில் போராடினான். கர்த்தர் அவனை வெட்கப்படுத்தி தை வெளியிட கிருபை அளித்தார். அதற்காக உள்ளத்தின் ஆழத்தில் ருந்து அவரை ஸ்தோத்தரிக்கிறேன். அன்பு நிறைந்த ஆண்டவர் யேசு தாமே இச்சிறு புத்தகத்தின் மூலம் தமது நாமத்தை மகத்துவப் டுத்தி அநேகர் கிறிஸ்துவின் அன்பை உணர கிருபை செய்வாராக.

் பெத்தேல் ஜெபவீடு,
25 -- 10 -- 1980.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
சகோதரன் **J. M.** ரோஸ்பாண்டியன்.



சகோதரன்

ரோஸ்பாண்டியன்

குடும்பத்தினர்

பொருளடக்கம்

		பக்கம்
	கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் ?	1
1.	சகலவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா	3
2.	கிறிஸ்து பாவமில்லாத பரிசுத்தர்	5
3.	கிறிஸ்து உங்களுக்காக எனக்காகத் தம்மையே தாழ்த்தியவர்	7
4.	கிறிஸ்து பாவிகளை நேசித்து அவர்களை இரட்சிக்கிறவர்	11
5.	கிறிஸ்து வியாதியஸ்தர்களுக்காக மனதுருகி அவர்களுக்கு சுகமளிக்கிறவர்	13
6.	கிறிஸ்து பசித்தவர்களுக்காக பரிதபித்து உணவளிக்கிறவர்	22
7.	கிறிஸ்து ஆறுதலற்று கலங்கித் தவிக்கிறவர்களுக்கு ஆறுதலளிக்கிறவர்	29
8.	கிறிஸ்து சமாதானத்தை இழந்து தவிக்கிறவர்களுக்கு சமாதானமளிக்கிறவர்	33
9.	கிறிஸ்து வாழ்க்கையின் கொந்தளிப்பை நீக்கி அமைதியைக் கட்டளையிடுகிறவர்	36
10.	கிறிஸ்து ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறிப்போன மக்களைத் தேடிவந்து தம்மண்டை சேர்க்கிறவர்	38
11.	கிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் கைகள் கட்டப்பட்டு கன்னத்தில் அறைபட்டவர்	42
12.	கிறிஸ்து நமக்காக அழகற்று தொங்கியவர்	45
13.	கிறிஸ்து நமக்காக தாகத்தால் நாவறண்டு கதறியவர்	47
14.	கிறிஸ்து உங்களுக்காக எனக்காக ஜீவனை இழந்து பிரேதமாக தொங்கியவர்	50
15.	கிறிஸ்து மரணத்தை ஜெயித்து என்றென்றைக்கும் ஜீவிக்கிற ஜீவாதிபதி	53
16.	கிறிஸ்து சதாகாலமும் நம்மோடிருக்கிறவர்	55
17.	கிறிஸ்து மாறாத வல்லமையுள்ள தேவன்	58
18.	கிறிஸ்து சர்வலோகத்தையும் நீதியாய் அரசாளுகிற ராஜாதி ராஜா	62
19.	கிறிஸ்து சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கும் நீதியுள்ள நியாயாதிபதி	64
20.	கிறிஸ்து நம்மை பரலோகத்தில் சேர்க்கிறவர்	65

பொருளடக்கம்

பக்கம்

கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் ? 1

1. சகலவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா 3
2. கிறிஸ்து பாவமில்லாத பரிசுத்தர் 5
3. கிறிஸ்து உங்களுக்காக எனக்காகத் தம்மையே தாழ்த்தியவர் 7
4. கிறிஸ்து பாவிகளை நேசித்து அவர்களை இரட்சிக்கிறவர் 11
5. கிறிஸ்து வியாதியஸ்தர்களுக்காக மனதுருகி அவர்களுக்கு சுகமளிக்கிறவர் 18
6. கிறிஸ்து பசித்தவர்களுக்காக பரிதபித்து உணவளிக்கிறவர் 22
7. கிறிஸ்து ஆறுதலற்று கலங்கித் தவிக்கிறவர்களுக்கு ஆறுதலளிக்கிறவர் 29
8. கிறிஸ்து சமாதானத்தை இழந்து தவிக்கிறவர்களுக்கு சமாதானமளிக்கிறவர் 33
9. கிறிஸ்து வாழ்க்கையின் கொந்தளிப்பை நீக்கி அமைதியைக் கட்டளையிடுகிறவர் 36
10. கிறிஸ்து ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறிப்போன மக்களைத் தேடிவந்து தம்மண்டை சேர்க்கிறவர் 38
11. கிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் கைகள் கட்டப்பட்டு கன்னத்தில் அறைபட்டவர் 42
12. கிறிஸ்து நமக்காக அழகற்று தொங்கியவர் 45
13. கிறிஸ்து நமக்காக தாகத்தால் நாவறண்டு கதறியவர் 47
14. கிறிஸ்து உங்களுக்காக எனக்காக ஜீவனை இழந்து பிரேதமாக தொங்கியவர் 50
15. கிறிஸ்து மரணத்தை ஜெயித்து என்றென்றைக்கும் ஜீவிக்கிற ஜீவாதிபதி 53
16. கிறிஸ்து சதாகாலமும் நம்மோடிருக்கிறவர் 55
17. கிறிஸ்து மாருத வல்லமையுள்ள தேவன் 58
18. கிறிஸ்து சர்வலோகத்தையும் நீதியாய் அரசாளுகிற ராஜாதி ராஜா 62
19. கிறிஸ்து சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கும் நீதியுள்ள நியாயாதிபதி 64
20. கிறிஸ்து நம்மை பரலோகத்தில் சேர்க்கிறவர் 65

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், என்று கேட்டார்.
(மத்தேயு 22:24)

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. நீங்கள் மேலே வாசித்த இந்த தேவனுடைய வார்த்தைகள் யாரால் ? எப்பொழுது ? யாரிடத்தில் ? கேட்கப்பட்டதென்பது உங்களுக்கு நன்ருக தெரிந்திருக்குமென எண்ணுகிறேன். உத்தேசம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மனுமக்களை இரட்சிப்பதற்காக இந்த உலகத்தில் மனிதனுக சுற்றி அலைந்து ஊழியம் செய்து வந்த நாட்களில் ஒரு நாள் தன்னை சூழ்ந்திருந்த பரிசேயரைப் பார்த்து கேட்ட ஒரு கேள்வியைத் தான் மேலே வாசித்தீர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு பரிசேயரைப் பார்த்து கேட்ட அதே கேள்வியை மையமாக வைத்து இந்த புத்தகத்தின் மூலம் சில காரியங்களை உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

கர்த்தராகிய இயேசுவைக் குறித்து பலர் பலவாருகச் சொல்லுகிருர்கள். ஒரு முகமதிய சகோதரனைப் பார்த்து அன்பான சகோதரனே ! கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ? அவரைக் குறித்துள்ள உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டால் - இயேசு ஒரு தீர்க்கதரிசி என்று கூறுவார். யூத மார்க்கத்தைச் சேர்ந்த ஒரு மனிதனை சந்தித்து நாங்கள் ஆராதித்து வருகிற இயேசு நாதரைக் குறித்து உங்களுக்கு இருக்கும் அபிப்பிராயம் என்ன ? நீங்கள் அவரைக் குறித்து என்ன நினைக்கிறீர்களென்று கேட்டால், இயேசு இந்த உலகத்தில் யூத ஜாதியில் பிறந்தபடியினுல், நானும் ஒரு யூதனுக இருக்கிறபடியினுல் அவர் எனக்கு சகோதரன் என்று கூறுவான். காலஞ்சென்ற இந்திய நாட்டின் ஜனுதிபதியாகிய

டாக்டர். ராதாகிருஷ்ணன் இயேசுகிறிஸ்துவை ஒரு உத்தமரென்று கூறியுள்ளார். அரசியல் வாதிகளிடத்தில் எங்கள் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ? அவரைக் குறித்த உங்கள் நம்பிக்கை என்னவென்று கேட்டால் இயேசு ஒரு சமூகசீர்திருத்தவாதி, ஒரு நல்லவர் என்று கூறுவார்கள்.

சுவாமி விவேகானந்தர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து " இயேசு பெருமானின் திரு அவதாரக் காலத்தில் நான் பாலஸ்தீன நாட்டில் வாழ்ந்திருந்தால், நான் இயேசு நாதரின் திருப்பாதங்களைக் கழுவி, அவருக்கு தொண்டு செய்திருப்பேன். எனது கண்ணீரால் அல்ல, எனது இரத்தத்தால் அவரது திருவடிகளைக் கழுவி தொண் டாற்றியிருப்பேன். இயேசுகிறிஸ்து எங்களுக்கு அந்நியர் அல்ல, அவர் எங்கள் கீழ் நாட்டைச் சேர்ந்தவரே ஆவர். இயேசு நாதர் எங்களுக் குரியவர். இயேசு நாதர் எனக்கு அருள் புரிவார், இயேசு பெருமானை அடியொற்றிப் பின் தொடரும் உண்மையான சீடர்கள் ஆயிரம் ஆயிர மாயெழும்ப வேண்டும், இயேசு சுவாமியைப போல் வாழ்ந்து காட்டும் புனித தியாகிகள் ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசு நாதரைப் போல் அன்புத் தொண்டாற்றும் தொண்டர்கள் ஆயிரம் ஆயிரம் வேண் டும். இயேசு நாதரைப் போல் தன்னலம் கருதாப்பிறர்க் குரியவர்கள் ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசுகிறிஸ்துவின் அகிம்சா வாழ்க் கையை வாழ்ந்து காட்டும் அகிம்சா மகான்கள் ஆயிரம் ஆயிரம் வேண் டும், இயேசு கிறிஸ்துவைப் போல் ஒப்பற்ற முற்றும் துறந்த முனி வர்கள் ஆயிரம் வேண்டும். இயேசுகிறிஸ்து என்னும் அன்பு அவதாரம், இந்தியாவெங்கும், கிராமங்களெங்கும், பட்டணமெங்கும், நாடெங்கும் பறைசாற்றப்பட வேண்டும். கிறிஸ்தவத் திருத்தொண்டர்கள் எங்கட் குத்தேவை. இயேசுகிறிஸ்து எங்களுக்குத் தேவை. அவர் இந்திய மக் களின் இதயத்தை ஆட்கொள்வாராக.

இயேசுகிறிஸ்து பெருமான் இவ்வுலகத்தில் திரு அவதாரம் செய்த செய்தி ஓர் அற்புத நட்சத்திரத்தால் கீழ் நாட்டு சாஸ்திரிக ளுக்கு அறிவிக்கப்பட்ட போது, அக்கீழ் நாட்டு சாஸ்திரிகள் உடனே சென்று, இயேசு என்னும் தெய்வக் குழந்தையைக் கண்டு, சாஷ்டாங் கமாய் விழுந்து அந்த தெய்வக் குழந்தையைப் பணிந்து கொண்டு

தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள். இக்கீழ் நாட்டு அவதாரத் தெய்வமாகிய இயேசுகிறிஸ்துவைக் கீழ் நாட்டு சாஸ்திரிகள் காணிக்கையைப்படைத்து, சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொண்டது போல, கீழ் நாட்டைச் சேர்ந்தவர்களாகிய நாமும் அவருக்கு நம் இருதயத்தையே காணிக்கையாகப் படைத்து அவரைப் பணிந்து கொள்வோமாகவென்று எழுதியுள்ளார்.

இப்படி கர்த்தாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து பலர் பலவாருகச் சொன்னுலும் இதை வாசிக்கிற கர்த்தருடைய பிள்ளையே! நீங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து வேதம் நமக்கு திரளான காரியங்களை அறிவிக்கிறது. அவற்றிலிருந்து சிலவற்றை நான் இந்த புத்தகத்தின் மூலமாக உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

1

கிறிஸ்து சகலவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர்.

இந்த நாட்களில் அநேகர் இயேசுகிறிஸ்துவைக் குறித்த போதுமான ஞானமில்லாதவர்களாக உங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் வருஷந்தானே ஆயிற்று. எங்கள் தேவர்களும், வேதங்களும் அதற்கு முன்னதாகவே இருக்கிறது. உங்கள் ஆண்டவர் எங்கள் தெய்வங்களுக்குப் பின்னுக தோன்றியவர். எனவே எங்கள் தெய்வங்களும் மதமும் தான் முதலாவதாகத் தோன்றிற்று என்று கூறுகிற போது கிறிஸ்தவ மக்களிலும் கூடபலர் அதற்குத் தகுதியான பதில் சொல்லத் தெரியாதவர்களாக திகைக்கிருர்கள்.

கர்த்தருடைய பிள்ளையே! இயேசு நாதர் தோன்றி இரண்டாயிரம் வருஷந்தானு ஆயிற்று? இல்லை. இல்லவே இல்லை. அவர் மனிதனை மீட்பதற்காக இந்த உலகத்தில் மனிதனுகப் பிறந்து இரண்டாயிரம் வருஷம் ஆயிற்று என்று சொன்னுலும், அவருடைய புறப்

படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. எனவே தீர்க்கத்தரிசியாகிய மீகா தனது தீர்க்கத்தரிசன புத்தகத்தில் மீகா 5:2-ம் வசனத்தில் " எப்பிராத்தா " என்னப்பட்ட பெத்தலேகேமே நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப் போகிறவர், உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று கூறியிருக்கிருன். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையதாயிருக்கிறபடியினுல் தேவனுடைய மனுஷனுகிய மோசேயும் 90-ம் சங்கீதம் 2-ம் வசனத்தில் " பர்வதங்கள் தோன்றும் முன்னும் நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கும் முன்னும் நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தெய்வமாயிருக்கிறீர் " என்று எழுதினுன். இதையறிந்த எரேமியா தீர்க்கத்தரிசி எரேமியா 6:16-ல் " வழியிலே நின்று பூர்வ பாதை எதுவென்று அறிந்து அதிலே நடவுங்களென்று கூறினுன். ஆம்! அருமையானவர்களே! இயேசு ஆதியும் அந்தமுமானவர். அவர் அல்பா ஒமேகா, அவர் முந்தினவர் பிந்தினவர். அவர் முந்தினவராயிருப்பது மட்டுமல்ல சகலவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர். இதை அறிந்த புற ஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் வம்சத்தாருக்கும் கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து பிரசங்கிப்பதற்காக தேவனுல் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம் என்று ஆண்டவரால நற்சாட்சி பெற்றபவுல் கொலோசேயர் 1:15-17 வரைக்குமுள்ள வசனங்களில் "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர், ஏனென்ருல் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய, காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானுலும், கர்த்தத்துவங்களானுலும், துரைத்தனங்களானுலும் அதிகாரங்களானுலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைத்திருக்கிறது " என்று எழுதினுன். சிருஷ்டிப்பைக் குறித்து திட்டமும், தெளிவுமாக அறிவிக்கிற ஒரே புத்தகம் சத்திய வேத புத்தகமே. இயேசுவே சிருஷ்டி கர்த்தா, அவர் உங்களையும், என்னையும், வானத்தையும், பூமியையும், அவற்றிலுள்ள சகலவற்றையும் சிருஷ்டித்தவர்.

2

கிறிஸ்து பாவமில்லாத பரிசுத்த தெய்வம்

அந்தபடியே நீதிமான் ஒருவனுமில்லை. நன்மை செய்கிறவன் ஒருவனுமில்லை. எல்லாரும் வழி தப்பி ஏகமாய் கெட்டுப் போனார்கள். நன்மை செய்கிறவன் ஒருவனுமில்லை. ஒருவனாகிலும் இல்லை என்று வேதம் கூறுகிறது. தன்னிலே பாவம் இல்லையென்று சொல்லுகிறவன் தேவனைப் பொய்யராக்குகிறான். சத்தியம் அவனுக்குள்ளே இராது என்று வேதத்தில் படிக்கிறோம். இந்த உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். தேவர்கள் என்று அழைக்கப்பட்டு வாழ்ந்து மறைந்த பல பெரியவர்களும் உண்டு. ஆனால் இந்த உலகத்தில் பாவம் செய்யாத ஒரு பரிசுத்தர் வாழ்ந்தாரென்றால் அவர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே. அவர் பிறப்பு முதல் இறப்பு வரை பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டார். அவரில் கொஞ்சமேனும் பாவம் கிடையாது. இயேசு நாதர் பாவம் செய்தாரென்று யாராவது ஒருவர் எனக்கு நிரூபித்துக் காட்ட முடியுமானால் அந்நேரமே என் கையிலிருக்கும் வேதப் புத்தகத்தை நான் கீழே வைத்துவிட்டு அவர்கள் காட்டுகிற வழி எந்த வழியாக இருந்தாலும், அதை பின்பற்றுவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன். இயேசு நாதர் வாழ்க்கையில் பரிசுத்தராயிருந்தபடியினால் யோவான் 8:46-ம் வசனத்தில் "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்த முடியும்"? என்று கேட்டார். அவர் ஜீவியத்தில் பரிசுத்தமுடையவராயிருக்கிறபடியினால் அவருடைய பிறப்பின் செய்தியை அவருடைய தாயாருக்கு முன்னறிவித்த தூதன், மரியாளே! உன்னிடத்தில் பிறப்பது பரிசுத்தமுள்ளதென்றான். அவர் பரிசுத்தமுடையவராயிருந்தபடியினால் தன்னை சூழ்ந்திருக்கிற அவருடைய சத்துருக்களைப் பார்த்து என்னிடத்தில் பாவமுண்டு என்று உங்களில் யாரென்னை? குற்றப்படுத்த முடியும் என்று கேட்டது மட்டுமல்ல, அவர் பரிசுத்தம் நிறைந்த தெய்வமாயிருக்கிறபடியினால் அவரைக் காட்டிக் கொடுத்த பாதகனாகிய யூதாஸ்காரியோத்து குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்தேன். ஆகையால் நான் பாவம் செய்தேன் என்றான். இயேசு பாவம் செய்

யாத பரிசுத்த தெய்வமாயிருக்கிறபடியினால் அவரை சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்த அநீதிமானாகிய பிலாத்து "இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் பாத்திரவானல்ல" என்றான். கிறிஸ்து இயேசு பாவம் செய்யாத பரிசுத்தராயிருக்கிறபடியினால் சிலுவையில் அவரோடு அறையப்பட்ட கள்ளன் "நாமோ நம்முடைய பாவங்களுக்குத் தக்கதாக தண்டிக்கப் படுகிறோம். இவரோ தகாத காரியம் ஒன்றையும் நடப்பிக்க வில்லையே" என்றான். கிறிஸ்துபாவம் செய்யாத பரிசுத்தராயிருக்கிறபடியினால் சிலுவையில் அவரைக் காவல் காத்த நூற்றுக்கதிபதி மெய்யாகவே இந்த மனுஷன் நீதிமான் என்றான். இயேசு பாவம் செய்யாதவர். மாசற்ற தூய ஆட்டுக்குட்டி. அவர் பாவம் செய்யாத பரிசுத்தராயிருக்கிறபடியினால் அவரைப் பின்பற்றுகிற நாமும் பரிசுத்தமுடையவர்களாக இருக்க வேண்டுமென விரும்புகிறார். எனவே "உங்கள் தேவனாயிருக்கிற நான் பரிசுத்தராயிருக்கிறபடியினால் நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டு பிரித்தெடுத்தேன்" என்றார்.

இதை அறிந்த தேவனுடைய பிள்ளையாகிய பவுல் "தேவன் உங்களை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கென்றே அழைத்திருக்கிறார். நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று எழுதினான். உங்களை அழைத்தவர் பரிசுத்தர்; நீங்களும் பரிசுத்தராயிருங்கள். இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்கள் உங்களை ஆராய்ந்து சோதித்துப் பாருங்கள். நீங்கள் பரிசுத்தமுடையவர்கள் தானா? உங்கள் தனித்த வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, வெளியரங்கமான, அந்தரங்கமான கிரியைகள் தேவனுடைய பார்வையில் பரிசுத்தமுடையதாயிருக்கிறதா? மனிதன் முகத்தைப் பார்க்கிறான்; தேவனோ இருதயத்தின் ஆழத்தைப் பார்க்கிறார். அவர் நமது அந்தரங்கங்களை அறிந்திருக்கிறார். இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். நீ பாதாளத்தில் உன் படுக்கையைப் போட்டாலும் அங்கே என் கண் உன்னைக் காணும் என்றார். இந்த ஆண்டவர் பார்வைக்கு பரிசுத்தமுடையவர்களாய் காணப்படுகிறீர்களா?

இன்று யார்? யாரெல்லாம் தங்களை கிறிஸ்தவன் என்று சொல்லுகிறார்கள்? நன்றாக குடித்து வெறித்து கும்மாளம் போடுகிற

வன். நாள் பார்க்கிறவன், பில்லிசூனியம் செய்கிறவன், கெட்டவார்த்தைப் பேசுகிறவன், பொய் சாட்சி சொல்லுகிறவன், கைக்கூலி வாங்குகிறவன், எல்லைக்கல்லைப் பிடுங்கி ஆஸ்தியை அபகரித்து எடுக்கிறவன், பிறனுக்கு விரோதமாக கள்ளக்கேஸ் போடுகிறவன், கள்ள அளவு அளக்கிறவன், கலப்படம் செய்கிறவன், கொள்ளை லாபம் அடிக்கிறவன், தானியத்தைப் பதுக்குகிறவன், கறுப்புச் சந்தையில் ஆஸ்தியை சேகரிக்கிறவன், விபச்சார வேசித்தனம் செய்கிறவன், கள்ளக் கணக்கு எழுதுகிறவன், கள்ளக் கையெழுத்துப் போடுகிறவன், பிறனுக்கு விரோதமாக மொட்டைக் கடிதம் அனுப்புகிறவன், ஏழை எளிய மக்களை அடித்து துன்புறுத்துகிறவன், அநியாயமாக பணத்தை வட்டிக்குக் கொடுத்து ஏழை ஜனங்களை வாட்டிப் பிழைக்கிறவன் இவ்விதமாக எல்லா பாவங்களையும் துணிகரமாகச் செய்து விட்டு, நானும் கிறிஸ்தவன் என்று கூறி சபைகளில் முன்னால் நின்று காரியங்களைச் செய்கிற வேளையில் " எழுதியிருக்கிறபடி கிறிஸ்து இயேசுவின் நாமம் புற ஜாதியார் மத்தியில் உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே" என்று கூறியுள்ளபடி கிறிஸ்தவனுடைய கிறிஸ்துவற்ற ஜீவியம்தானே இன்று அநேகர் இயேசுவண்டை வருவதற்குத் தடையாயிருக்கிறது. கிறிஸ்து ஜீவியத்தில் பரிசுத்தமுள்ளவர்.

கர்த்தருடைய பிள்ளையே! ஒருவேளை உங்களுடைய ஜீவியம் இன்று வரை பரிசுத்தமற்றதாயிருந்திருக்குமானால் தயவு செய்து இன்றைக்காவது உங்களில் காணப்படும் குற்றம் குறைகளை அறிக்கைச் செய்து விட்டு விலகி கர்த்தருக்கேற்ற பரிசுத்த வாழ்க்கை செய்ய ஒரு நல்ல தீர்மானம் செய்ய மாட்டீர்களா? கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து ஜீவியத்தில் பரிசுத்தமுடையவர்.

3

கிறிஸ்து உங்களுக்காக எனக்காகத் தம்மையே தாழ்த்தியவர்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்து வந்த நாட்களில் எதைப் போதித்தாரோ அதை சாதனையில் நிறைவேற்றினார். மற்றவர்களுக்கு போதிப்பது ரொம்ப இலேசான காரியம்

ஆனால் போதித்ததை சாதனையில் நிறைவேற்றுவது கடினமான காரியம். இன்று பலர் பல காரியங்களைக் குறித்து மற்றவர்களுக்குப் போதிக்கிறார்கள். ஆனால் தாங்கள் போதிக்கிறபடி ஜீவிக்கிறார்களாவென்பதைக் குறித்து கொஞ்சமேனும் சிந்திப்பதில்லை, ஆனால் இயேசு அப்படிப்பட்டவரல்ல, அவர் தான் போதித்ததை தமது சாதனையில் செய்து காட்டினார்.

தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்தப்படுவான். தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்தப்படுவான் என்று இயேசு கிறிஸ்து கூறினார். எனவே இயேசு மனுமக்களை மீட்பதற்காக தன்னையே தாழ்த்தினார். இதை உணர்ந்த தேவனுடைய மனுஷனாகிய பவுல் பிலிப்பியர் 2:5 முதல் 8 வரைக்குமுள்ள வசனங்களில் " கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது . அவர், தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தமும் கீழ்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார் " என்று எழுதினான்.

ஆம் பிரியமான கர்த்தருடைய பிள்ளையே ! பவுல் இங்கே கிறிஸ்துவைக் குறித்து எழுதியிருப்பது எவ்வளவு அருமையாயிருக்கிறது ! கிறிஸ்து யார் ? அவர் பரலோகத்தில் கோடா கோடி தூதர்களின் மத்தியில் சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்று ஓயாமல் துதிக்கப்படுகிற துதிகளின் மத்தியில் வாசம் செய்தவர். பாவத்தின் காரணமாக மனிதன் தேவனை விட்டுத் தூரம் போய் சாபத்திற்குள்ளாகி, வியாதிப்பட்டு நித்திய நரகத்திற்கு நேராக விரைந்து சென்று கொண்டிருந்த போது அந்த மனிதனை மீட்பதற்காக தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல் அடிமை ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர் மனுக்குலத்தை மீட்பதற்காக தம்மைத் தாமே தாழ்த்தி தேவாதி தேவன் மாட்டுத் தொழுவத்தில் ஏழையாக பிறந்து, நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. மனுஷ குமாரனாகிய எனக்கோ தலை சாய்க்க இடமில்லை என்று கூறி; காடுகளிலும், மேடுக

ளிலும்; பட்டணங்களிலும், கிராமங்களிலும், மலைப்பிரதேசங்களிலும், கடலோரங்களிலும் சுற்றித்திரிந்து, ஞான உபதேசங்களைக் கொடுத்து அற்புதங்களைச் செய்து, அடையாளங்களைச் செய்து, மனுமக்கள் அவரை ஏற்றுக் கொள்ளாதபடியினால் சிலுவை பரியந்தம் சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தி ஜீவனை விட்டார்.

பிரியமானவர்களே! பாவங்களில் பெரிய பாவம் பெருமை யென்று வேதம் கூறுகிறது. பெருமையுள்ளவனுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவனுக்கோ கிருபையளிக்கிறாரென்று, தேவனுடைய மனுஷனாகிய யாக்கோபு கூறினான். தேவன் மனுஷனோடு எதிர்த்து நிற்கிறார் என்று கூறப்பட்டிருக்கிற பாவம் பெருமையே. சத்திய வேதத்தைக் கவனமாக நாம் படிக்கிற வேளையில் பெருமையின் காரணமாக சிறுமைப்பட்டுபோன பலரையும், தாழ்மையின் காரணமாக மேன்மையடைந்த பலரையும் குறித்து படிக்கிறோம்.

பிசாசுகளின் தலைவனாகிய லூசிப்பர் பெருமையின் காரணமாக பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டான். லூசிப்பரைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவன் உன்னதத்தில் வாசம் செய்தான். பரலோகத்தைப் பரவசப்படுத்துகிற ஒரு தூதனாக இருந்தான். லூசிப்பர் தனது இறக்கையை அடித்து பரலோகத்தில் இங்கும் அங்குமாய் பறந்தால் உலகத்தில் சிறந்த வாத்தியக் கருவிகளிலிருந்து வரும் இன்னிசை அவனது இறக்கையிலிருந்து வெளிவருமாம். இயேசுகிறிஸ்துவிற்கு அடுத்த ஸ்தானம் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவன் ஒரு நாள் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று தன்னைக் குறித்து பெருமை பாராட்டினபடியினால் பரலோகத்திலிருந்து பாதாளத்திற்குத் தள்ளப்பட்டான். ராஜவாகிய நேபுகாத்நேச்சர், "என் மகிமைப் பிரதாபத்திற்கென்று நான் கட்டின மகா பாபிலோன்" என்று கூறி தன்னைக் குறித்து பெருமை பாராட்டினபடியினால் ராஜ்ஜிய பாரத்திலிருந்து தள்ளப்பட்டு மிருகத்தைப் போல் புல்லை மேய்ந்தான். ஏரோது ராஜா பெருமையின் காரணமாக புழுப் புழுத்துச் செத்தான்.

இன்று மனுமக்களில் அநேகர் தங்கள் ஜாதியைக் குறித்து, பட்டம் பதவியைக் குறித்து, ஆஸ்தி சம்பத்தைக் குறித்து, சரீர சுகம்

பெலன் பராக்கிரமத்தைக் குறித்து, தங்கள் சரீர அழகு இவற்றைக் குறித்து, இன்னும் சிலர் தங்கள் பக்தியைக் குறித்து பெருமை பாராட்டவில்லையா ? தேவனுடைய பிள்ளையே ! எப்படி நாம் நம்மைக் குறித்து பெருமைபாராட்டினாலும் தேவன் நமக்கு எதிர்த்து நிற்கிறவராயிருக்கிறார். இதற்கு நேர்மாறாக நாம் நம்மைத் தாழ்த்துவோமானால் தேவன் நம்மை நிச்சயமாக மேன்மைப் படுத்துவார்.

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து கானானுக்கு வழி நடத்தின மோசே, எகிப்தின் சகல சாஸ்திரங்களையும் கற்று வாக்கிலும் செயலிலும் வல்லவனாயிருந்தாலும் ஆண்டவர் அவனை அழைத்த போது " நான் திக்குவாயும், மந்த நாவுமுடையவன், வாக்கிலும், செயலிலும் வல்லமையில்லாதவன் என்றுக் கூறி தன்னைத் தாழ்த்தினான். கர்த்தர் அவனைத் தெரிந்தெடுத்து தமது ஜனத்தை வழி நடத்தி அவனோடு வாசம் செய்து. பலத்த அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தார். மீதியானியரின் அடிமைத்தனத்திலிருந்து தமது ஜனத்தை விடுவிப்பதற்காக தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட மனோவாவின் மகனாகிய கிதியோன் தன்னைத் தாழ்த்துகிறவனாக இருந்தான். ஆகவே தெய்வ தூதன் அவனைச் சத்துருக்களின் கையிலிருந்து தமது ஜனத்தை விடுவிக்க அழைத்த வேளையில் ஆ ! என் ஆண்டவனே நான் எப்படி என் ஜ ன த் தை விடுவிப்பேன். இதோ இஸ்ரவேலில் என் குடும்பம் மிகவும சிறிய குடும்பம் என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன், எளியவனாகிய நான் எப்படி என் ஜனத்தைச் சத்துருவின் கையிலிருந்து இரட்சிப்பேன் என்று கூறித் தன்னைத் தாழ்த்தினான். கர்த்தர் அவனோடிருந்து கடற்கரை மணலத்தனையான மீதியானியரின் படையை முறியடித்து இஸ்ரவேலருக்கு ஜெயத்தைக் கொடுத்தார்.

ஆயக்காரன் சமுதாயத்தாரால் புறக்கணித்துத் தள்ளப்பட்டவன். ஏராளமாக லஞ்சம் வாங்கி அநியாயமாக ஆஸ்தியை சேகரித்தவன்; இப்படி அநேக பாவங்களுக்கு அடிமைப்பட்டு ஆகாதவனாயிருந்தாலும்; தேவனுடைய ஆலயத்திற்கு வரும் போது; வானம் தேவனுடைய சிங்காசனம், பூமி அவருடைய பாதப்படியாயிருக்கிறபடியினால் வானத்தைக்கூட அண்ணார்ந்து பார்க்கத் தைரியமற்றவனாக தனது

மார்பிலே அடித்துக் கொண்டு, தன்னைத் தாழ்த்தி, ஆண்டவரே பாவியாகிய என்மேல் கிருபையாயிருமென்று ஜெபித்த போது தாழ்மையுள்ள அவன் ஜெபத்தை ஆண்டவர் ஏற்றுக் கொண்டார். பரிசேயன் எவ்வளவு நீதிமானாகத் தன்னைக் கருதியிருந்தாலும், உபவாசமிருந்து கற்பனைகளைக் கைக் கொண்டு, தசமபாகத்தை ஒழுங்காக செலுத்தினாலும் தெய்வ சமூகத்தில் தேவனோடு தன்னை ஒப்பிட்டுப்பார்த்து தன் குறைகளை உணர்ந்து தன்னைத் தாழ்த்தி ஜெபிப்பதற்குப் பதிலாக, ஆயக்காரனோடு தன்னை ஒப்பிட்டு; ஆண்டவரே இந்த ஆயக்காரனைப் போலிராதபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று கூறி, தன் சுயநீதியை நம்பி பெருமையோடு ஜெபித்தபடியினால் கர்த்தர் அவன் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பரிசேயனல்ல, ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாகத் திரும்பினானென்று இயேசு சொன்ன சமபவம் உங்களுக்குத் தெரியுமே. இதைப் படிக்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்கள் தேவனுடைய பார்வைக்கு தாழ்மையுடையவர்களாய் நடக்கிறீர்களா? இன்று வரைக்கும் ஒருவேளை நிலையில்லாத பல உலக காரியங்களைக் குறித்து பெருமை பாராட்டி தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருப்பீர்களானால் இன்று உங்களைத் தாழ்த்தி குறைகளை அறிக்கைச் செய்து விட்டு விடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். அவர் உங்களையும என்னையும் மீட்பதற்காகத் தன்னையே தாழ்த்தினவர்.

4

கிறிஸ்து பாவிகளை நேசித்து அவர்களை இரட்சிக்கிறவர்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவத்தை முற்றுமாக வெறுக்கிறார். ஆனால் அவர் பாவிகளையோ நேசிக்கிறார். பாவிகள் மீது அவருக்கு இருக்கும் மேலான அன்பின் காரணமாக பரலோகத்தை விட்டே இந்த பூமியில் மனிதனாகப் பிறந்தார். அவர் பாவியை அதிகமாய் நேசிக்கிறபடியினால் லூக். 19:5-ம் வசனத்தில் "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா; இன்று நான் உன் வீட்டில் தங்கவேண்டும்" என்று கூறி அவனை அழைத்தார். இந்த சம்பவம் உங்களுக்கு நன்றாகத் தெரிந்த சம்பவமே. சகேயு ஒரு ஆயக்காரன். சமுதாயத்தால் புறக்

கணித்துத் தள்ளப்பட்டவன். அநியாயமாக ஆஸ்தியைச் சேகரித்தவன். என்ருலும் ஒருநாள் இயேசுவைக் காண விரும்பினுன். எனவே அவன் எரிகோவின் வீதியில் காட்டத்தி மரத்தில் ஒழித்திருக்கிருன். இதை அறிந்து கொண்ட இயேசு வெயிலேயும் பொருட்படுத்தாமல் எரிகோ வீதி வழியாக வேகமாய் நடந்து வந்து அந்த அத்திமரத்தின் கீழ் நின்று சகேயுவே என் மகனே ! நீ சீக்கிரமாய் இறங்கி வா இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும். என் பிள்ளேயே ! இழந்து போன உன்னேத் தேடி மீட்கவே மனுஷ குமாரனுகிய நான் இந்த உலகத்திற்கு வந்தேன் என்று கூறி அவன் வீட்டிற்குச் சென்று அவனேத் தனக்கு பிரியமான பாத்திரமாக மாற்றி “ இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்வது இவனும் ஆபிரகாமிற்குக் குமாரனுயிருக்கிருனே ” என்று அவனேக் குறித்து சாட்சியும் கொடுத்தார்.

அவர் பாவியை நேசிக்கிற தெய்வம். ஆகவே மத்தியான வெயிலேயும் பெரிதென்று பாராமல், சமாரியா துரவண்டையில் போய் அங்கே நின்ற நெறிகெட்டுப்போன பாவியான ஸ்திரீயைப் பார்த்து தாகத்திற்குத் தா என்று கேட்டு அவளேத் தனக்கு சாட்சியாக்குகிருர். அவர் பாவியை நேசிக்கிறவராயிருந்தபடியினுல் பரிசேயனுகிய சீமோன் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றிருந்த வேளேயில் தனது பாதத்தைத் தேடி வந்த பாவியான ஸ்திரீ எல்லாராலும் அருவருக்கப்பட்டவளாயிருந்தும், அவள் தன்னண்டை வந்து தனது பாதத்தைக் கண்ணீரால் நனேத்து, தலேமயிரினுல் தனது பாதத்தைத் துடைத்து, ஓயாமல் பாதத்தை முத்தம் செய்து, தனது பாவத்தினிமித்தம் விசனப்பட்டு உள்ளம் நொந்து நின்ற காட்சியைப் பார்த்து உள்ளம் உருகி மகளே உன் விசுவாசம் உன்னே இரட்சித்தது, நீ சமாதானத்துடனே போவென்று அவள் பாவத்தை மன்னித்து அனுப்பினுர். அவர் பாவி மீது அன்பு நிறைந்த தெய்வமாயிருக்கிறபடியினுல் இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீது பாவம் செய்து உள்ளம் உடைந்து அறிக்கை செய்த போது அவன் பாவத்தை மன்னித்து “ ஈசாயின் குமாரனுகிய தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனுகக் கண்டேன்” என்று அவனேக்குறித்து சாட்சியும் கூறி, மனுக்குலத்தை இரட்சிக்க அவன் சந்ததியிலேயே மனிதனுகப் பிறந்து; தாவீதின் குமாரனுகிய இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாறு என்று புதிய ஏற்பாடு ஆரம்பிக்கும் பெரிய பாக்கியத்தை அவ

னுக்கு அளித்து அவனை மேன்மைப்படுத்தினர். அவர் பாவிகளின் நேசராயிருக்கிறபடியினுல் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப் பட்டு யூத முறைமையின்படி கல்யெறியப்படுவதற்காக நிறுத்தப்பட்ட ஸ்திரீயைப் பார்த்து நீ, போ இனி பாவம் செய்யாதே, நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை என்று அவள் பாவத்தை மன்னித்து அனுப்பினுர். எனவே என்னிடத்தில் வருகிறவனை ஒருக்காலமும் நான் புறம்பே தள்ளுவதில்லை. நீதிமான்களையல்ல பாவிகளையே மனந்திரும் புவதற்கு அழைக்க வந்தேன் என்ருர். அவர் எந்தப் பாவியானுலும் தள்ளமாட்டார். துரோகம் செய்தாலும் அவரை நோக்கிப்பார் உன்னை இரட்சிப்பார்.

இதைவாசிக்கின்ற தேவனுடைய பிள்ளையே! ஒருவேளை நீங்களும் ஏராளமான பாவத்திற்கு அடிமைப்பட்டு உள்ளம் நொந்து வேதனைப் படுகிறீர்களா? சமுதாயம் உங்களைப் புறக்கணிக்கிறதா? ஊரார் உங்களைப் பகைக்கிருர்களா? இனத்தார் ஜனத்தார் உங்களை புறக்கணித்து தள்ளிவிட்டார்களா? நீங்கள் பயப்படவேண்டாம். இயேசு உங்களை நேசிக்கிருர். உங்கள் ஆத்துமா இயேசுவின் பார்வையில் விலையேறப்பெற்றது. அவர் உங்களுக்காக மாணத்தை ருசிபார்த்தார். ஆகவே அவர் உங்களைப் புறக்கணிக்க விரும்பவில்லை. உங்களை அதிக மாய் நேசிக்கிருர்.

எப்படியென்ருல் ஒருநாள் ஒருமிஷனறி தனது ஊழியத்தை முடித்து தன்வீட்டில் களைத்து இருந்தார். அப்பொழுது ஒருவாலிபன் அங்கே வந்தான். மிஷனறியிடம் மிஷனறி அவர்களே! சாயங்காலம் நாலுமணிக்கு என்வீட்டிற்கு வரமுடியுமா வென்று கேட்டான். மிஷ னறி சரி வாலிபனே சாயங்காலம் நாலுமணிக்கு உன்வீட்டிற்கு வருகி றேன் என்று கூறி அவனை அனுப்பினுர். சற்று நேரம் கழித்து அவரோடு உடன் வேலைசெய்கிற ஒருசகோதரன் அங்கேவந்து ஐயா! அந்த வாலிபன் இங்கே எதற்காக வந்தான் என்று கேட்டார். மிஷனறி வாலிபன் என்னை நாலு மணிக்கு அவன் வீட்டிற்கு அழைத்திருக் கிருன். வருவேன் என்று வாக்களித்துவிட்டேன். அவன் வரவிற்காக காத்திருக்கிறேன் என்ருர். அதற்கு அந்த சகோதரன் ஐயா! தயவு செய்து அந்தவாலிபனேடே நீங்கள் செல்லவேண்டாம். அவன் ஒரு

பொல்லாத வாலிபன் அவனுக்குப் பின்னுல் நீங்கள் சென்ருல் உங்கள் உயிருக்கு ஆபத்து வருமென்று கூறினுர். மிஷனறி இல்லே. நான் வருவேன் என்று வாக்களித்து விட்டேன். ஆகையால் எப்படியும் அந்த வாலிபனேடு நான் செல்ல வேண்டுமென்று கூறி அவன் வரவிற்காக காத்திருந்தார்.

சாயங்காலம் 4மணிக்கு வாலிபன் வந்தான் மிஷனறி அவர்களே சாயங்காலம் நாலுமணிக்கு என்னேடு வருவேன் என்று வாக்களித் தீர்கள் நாலுமணி ஆகிறது. வாருங்கள் என்று அவரை அழைத்தான் மிஷனறி தன்கையிலே வேதபுஸ்தகத்தை எடுத்து; ஆண்டவரை நோக்கி இவ்வாறு ஜெபித்தார். ஆண்டவரே இந்த பொல்லாதவாலி பனேடு நான் செல்கிறேன். உமக்குச்சித்தமானுல் நான்திரும்ப வர கிருபை செய்யும். எப்படியாயினும் இந்த வாலிபனேச் சந்தியுமென்று ஜெபித்து அவனுக்குப்பின்னே சென்ருர். வாலிபன் மிஷனறியை ஒரு பயங்கரமான காட்டிற்கு நேராக அழைத்துச் சென்ருன்.

இருள் சூழ்ந்த ஒரு இடத்தில் ஒரு சிறிய வீடுகட்டப்பட் டிருந்தது. அந்த வீட்டிற்குள் மிஷனறியை அழைத்துக் கொண்டு போய் ஒரு அறையில் அவரை நிறுத்தி அந்த அறையின் கதவு ஜன்னல்களே அடைத்து, நிறைக்கப்பட்ட ஒரு துப்பாக்கியைத் தனது கையில் எடுத்து, மிஷனரிக்கு நேராக நீட்டி, மிஷனறி அவர்களே! இயேசுஎன்னே நேசிக்கிருரா வென்று கேட்டான். அதற்கு மிஷனறி ஆம் வாலிபனே உன்னே இயேசு நேசிக்கிருர். என்ருர். உடனே வாலி பன் தன் பணப் பெட்டியைத் திறந்தான். ஏராளமான தங்கநகைகளே யும், முத்துமாலேகளேயும் அவருக்கு முன்னுல் குவித்தான். மிஷனறி அவர்களே! இவ்வளவு திரளாக ஆஸ்தியை நான் எவ்வாறு சம்பா தித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா வென்று கேட்டான் மிஷனறி, வாலிபனே அது எப்படியென்று கேட்டார். வாலிபன் சூதாட் டத்தின் காரணமாக இவ்வளவு ஆஸ்தியைச் சேகரித்தேன். இந்த காட்டிலே என்னேடு சூதாடவந்த அநேக பிரபுக்கள் தங்கள் செல் வத்தை இழந்து தெருக்களில் யிச்சை கேட்டு அலேகிருர்கள். ஏரா ளமானபேர் தங்கள் செல்வத்தை இழந்து தற்கொலே செய்துகொண் டார்கள், அநேகர் பைத்தியம் பிடித்து அலேகிருர்கள். இப்படி திரளான

குடும்பத்தைப் பாழாக்கின என்னை இயேசு நேசிப்பாரா என்று கேட்டான். மிஷனறி ஆம் வாலிபனே இயேசு உன்னை நேசிக்கிறார் என்றார். அப்பொழுது வாலிபன் மிஷனறியை ஒரு குழிக்கு நேராக அழைத்துச் சென்றான். அந்தக் குழியின் சமீபத்தில் சென்ற போது பயங்கரமான நாற்றம் வீசியது. வாலிபன் மிஷனறியிடம் இந்தக் குழியினுள்ளாக என்ன இருக்கிறது பாருங்கள் என்றான். மிஷனறி உற்றுப் பார்த்து வாலிபனே இது என்ன கோரக் காட்சி என்றார். வாலிபன் மிஷனறி அவர்களே! இதெல்லாம் மனிதப் பிரேதங்கள். இந்தப் பிரேதங்களெல்லாம் ஏழை எளிய மக்களுடைய பிரேதங்களல்ல. பிரபுக்களுடைய பிரேதங்கள் இங்கே இருக்கின்றன. இராஜ குமாரர்களுடைய பிரேதங்களும் இங்கே இருக்கிறது. இந்தக் காட்டிலே என்னோடு சூதாட வந்தவர்தள் என் வார்த்தைக்கு எதிர்த்து பேசின போது அவர்களையெல்லாம் நான் கொன்று குவித்தேன். இப்படிப்பட்ட மனித கொலைப் பாதகனாகிய என்னை இயேசு நேசிப்பாராவென்றான். மிஷனறி ஆம் வாலிபனே! உன்னை இயேசு நேசிக்கிறார் என்றான்.

வாலிபன் அப்படியானால் மிஷனறி அவர்களே! இன்னும் என்னோடு வாருங்கள் என்று சொல்லி மிஷனறியை இன்னொரு அறைக்கு அழைத்துச் சென்றான். அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. அந்த அறையில் ஏராளமான குப்பிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மிஷனறி, வாலிபனே! இதென்னக் காட்சி என்றார். வாலிபன் மிஷனறி அவர்களே! இதுதான் என் மதுபான அறை. இங்கே பிரபுக்களை, அரச குமாரர்களை அழைத்து வருவேன். அவர்களை நன்றாகக் குடிக்க வைப்பேன். அவன் குடித்து வெறித்து புத்தி மயங்கின பின்பு அவர்கள் ஆஸ்தியை அபகரித்து அனுப்புவேன். இப்படிப்பட்ட குடிகாரனாகிய என்னை இயேசு நேசிப்பாராவென்றான். மிஷனறி ஆம் வாலிபனே! இயேசு உன்னை நேசிக்கிறார் என்றார்.

வாலிபன் மிஷனறியைப் பார்த்து அப்படியானால் மிஷனறி அவர்களே! இன்னும் என்னோடு ஒரு இடம் வாருங்கள் என்று சொல்லி சற்று தூரத்திற்கு அப்பால் தனது மனைவி, பிள்ளைகள் வசித்து வந்த வீட்டிற்கு நேராக அழைத்துச் சென்றான். சற்று தூரத்திற்கு அப்பால் ஒரு வீடு கட்டப்பட்டிருந்தது. அந்த வீட்டைச் சமீபிக்க, சமீபிக்க வாலி

பனுடைய கண்கள் கலங்கினது. அவனது கண்களிலே கண்ணீர் பெருகி கன்னங்கள் வழியாகத் தாரை தாரையாகப் பாய்ந்தது. மிஷனறி என்ன. இந்த வாலிபன் மிகவும் கோபமுடையவனுகக் காணப்பட்டான். இவனுடைய முகம் மிகவும் பயங்கரமாக இருந்தது. இப்பொழுது கண்ணீர் சிந்தி அழுகிறுனே - காரணம் ஒன்றும் தெரியவில்லையே என்று அவனுக்குப் பின்னுல் பொறுமையாகச் சென்றுர். வாலிபன் அந்த வீட்டைச் சமீபித்த போது வாய் விட்டு கதறி அழுதான். அந்த வீட்டின் கதவண்டையில் சென்று மெதுவாகக் கதவைத் தட்டினுன். ஒரு ஏழை சரீரம் மெதுவாக ஊர்ந்து ஊர்ந்து வந்து அந்தக்கதவைதிறந்து பொத்தென்று கீழே விழுந்து விட்டது - மிஷனறி, வாலிபனே இதென்னக் காட்சி என்றுர். வாலிபன் மிஷனறி அவர்களே ! இதுதான் என் மனைவி. நேற்று நான் குடித்து வெறித்து என் வீட்டிற்கு வந்தேன். என்னுடைய குடி வெறியை அறியாத என் மனைவி அன்போடு எனக்காகக் கதவைத்திறந்தாள். பாதகனுகிய நான் என் மனைவியின் அன்பை உணராதவனுக அவளை நன்ருக அடித்து காயப்படுத்தி விட்டேன். என் மனைவி இப்பொழுது குற்றுயிராகக் காணப்படுகிறுர்கள். தகப்பன் வீட்டிற்கு வருகிறுன் என்றுல் பிள்ளைகள் அப்பா என்று ஓடி வருவார்கள். பாதகனுகிய நான் என் வீட்டிற்கு வரும் போது என் குழந்தைகள் பூனையைக் கண்ட எலியைப் போல ஆங்காங்கே பயந்து ஒழிக்கிறுர்கள், மிஷனறி அவர்களே! இப்படிப்பட்ட சூதாட்டக் காரனுகிய என்னை, கொலைப்பாதகனுகிய என்னை, குடிகாரனுகிய என்னை, பொல்லாதவனுகிய என்னை இயேசு நேசிப்பாரா என்றுன். மிஷனறி ஆம் வாலிபனே ! உன்னை இயேசு நேசிக்கிறுர் என்றுர். வாலிபன் அப்படியானுல் மிஷனறி அவர்களே ! அந்த இயேசுவைக் ஏற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்றுன். மிஷனறி வாலிபனே உன் பாவங்களை நீ அறிக்கை செய். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான் என்றுர்.

வாலிபன் தன் முழங்கால்களை ஊன்றி, தன்னைத் தாழ்த்தி கண்ணீரோடு தன் பாவங்களை அறிக்கை செய்தான். சற்று நேரம் கழிந்தது; வாலிபன் துள்ளிக் குதித்தான். மிஷனறி அவர்களே ! இனி நான் கொலைப்பாதகனல்ல, குடிகாரனல்ல, சூதாட்டக்காரனல்ல நான் இனி இயேசுவின் பிள்ளை. இயேசு என் பாவத்தனைத மன்னித்தார்

நான் இனி இயேசுவுக்குப் பிள்ளையென்று தன்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான்.

அன்பான தேவனுடைய பிள்ளையே! இப்படிப்பட்ட ஒரு பொல்லாதவனை, கொலைப்பாதகனை இயேசு இரட்சித்து தனக்குச்சாட்சியாக்க முடியுமென்றால் உங்களைத் தனக்குச் சாட்சியாக்க மாட்டாரா? இந்தப் புத்தகத்தை உங்களுக்கு எழுதுகிற நான் ஒருசில வருஷங்களுக்கு முன்னால் இயேசுவுக்கு ஆகாத ஒரு பாதகனாக ஜீவித்து வந்தேன். ஏராளமான பாவங்களுக்கு அடிமைப்பட்டு, நாயினும் கேடானவனாக வாழ்ந்து வந்தேன். பொல்லாத பாவியாக வாழ்ந்து வந்த நான் ஒருநாள் இயேசுவின் பாதத்தில் என் பாவங்களை அறிக்கை செய்தேன். அவர் தமது கல்வாரியின் இரத்தத்தால் என்னைக் கழுவி சுத்தம் செய்தார். அந்த இயேசு உங்களையும் நேசிக்கிறார். துன்மார்க்கன் தன் பாவத்தில் கெட்டழிந்து போவதை விரும்பாமல் அவன் பிழைத்திருப்பதையே விரும்புகிறேன் என்றார். நாம் கெட்டுப்போவது அவருக்குப் பிரியமானதல்ல. நாம் ஒவ்வொருவரும் மனந்திரும்ப வேண்டுமென்பதே அவருக்குப் பிரியமானது. அவர் பாவிகள் மீது மனதுருகுகிற தெய்வம்.

கர்த்தருடைய பிள்ளையே! இன்று வரைக்கும் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களாக வாழ்ந்து வருவீர்களானால் இப்பொழுதாவது உங்கள் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிலகி அவரை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா? கர்த்தாகிய இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய பாவம் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் உறைந்த பனியைப் போல வெண்மையாக்கும் சக்தி இயேசுவின் இரத்தத்திற்கு உண்டு. கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து பாவியை நேசித்து, பாவத்தை மன்னித்து அவர்களை இரட்சிக்கிறவர்.

5

கிறிஸ்து வியாதியஸ்தர்களுக்காக மனதுருகி அவர்களுக்கு சுகமளிக்கிறவர்

நம்முடைய ஆண்டவர் இரக்கமும் மன உருக்கமும் நிறைந்தவர். அவர் வியாதியஸ்தர் மீது இரக்கமும் மன உருக்கமும் நிறைந்த தெய்வம். எனவே, மத்தேயு 23:34 -ம் வசனத்தில் " இயேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள் பார்வை அடைந்து, அவருக்குப் பின் சென்றார்கள் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம செய்து வந்த நாட்களில் ஒருநாள் எரிகோ வீதி வழியாக நடந்து வருகிறார். வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்கள் இயேசு அவ்வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு இயேசு ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ ஆண்டவரே, தாவீதின் குமாரனே எங்களுக்கு இரங்குமென்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள். இயேசு நின்று அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து, நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அவர்கள் பார்வையடைய வேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி அவர்கள் கண்களைத் தொட்டு பார்வை அளித்தார். இயேசு வியாதியஸ்தர்களைக் காண்கிற போதெல்லாம் உள்ளம் உருகி சுகமளிக்கிறவராக இருந்தார்.

வேத புத்தகத்தில் எனக்கு மிகவும் பிரியமான வசனங்களில் ஒன்று மத். 14:14 -ம் வசனம். அங்கே " இயேசு வந்து, திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேல் மனதுருகி, அவர்களில் வியாதியஸ்தர்களாயிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் எனக்கு மிகவும் பிரியமான வார்த்தை " இயேசு மனதுருகினார் " என்பது. அவர் வியாதியஸ்தர்களைக் கண்ட போது அவர்களுக்காக மனதுருகினார். பரிதபித்தார். உள்ளம் உருகி சுகமளித்தார்.

இயேசு நாதர் இந்த உலகத்தில் ஊழியம் செய்து வந்த நாட்களில் ஒருநாள் ஒரு கொன்னை வாயுடைய ஒரு செவிடனைக் கண்டார். அந்தச் செவிடனைப் பார்த்த மாத்திரத்தில் வானத்தை அண்ணாந்து பார்த்து பெருமூச்சு விட்டார் என்று வேதம் நமக்கு அறிவிக்கிறது. ஏன் பிரியமானவர்களே கொன்னைவாயுடையச் செவிடனைப் பார்த்து இயேசு பெருமூச்சுவிட வேண்டும்? இன்னும் கொஞ்ச நேரத்திற்குள்ளாக அவனைச் சுகமாக்கத்தான் போகிறார். அப்படியானால் ஏன் அவர் அவனுக்காகப் பெருமூச்சுவிட வேண்டும்? நாம் எப்பொழுது பெருமூச்சு விடுவோம்? தாங்க முடியாத கவலைகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளுகிற வேளையில், நமக்கு அருமையானவர்கள் கொடிய வியாதியினால் வேதனைப்படுகிற போது நமது குடும்பங்களில் நமக்குப் பிரியமானவர்கள் மரித்துப் போகிற வேளையில், பெருத்த கஷ்டங்களும் நஷ்டங்களும் வரும்போது கவலையைத் தாங்க முடியாதபடி பெருமூச்சு விடுவோம். இங்கே இயேசு நாதர் பெருமூச்சு விடுகிறாரே காரணம் என்ன? இந்த மனிதனைப் பார்த்தவுடன் இயேசு பாவத்தின் கொடுமையைச் சிந்தித்தார்-ஐயோ! நான் மனிதனை உண்டுபண்ணினபோது அவனைச் செவிடனாக, ஊமையனாக, சப்பாணியாக, குருடனாக உண்டு பண்ணவில்லை. எனது சாயலில் அவனைச் சிருஷ்டித்து, எனது ஜீவசுவாசத்தை அவனுக்கு அளித்து, என்னுடைய மகிமையினால் அவனை நிறைத்திருந்தேன். ஆனால் பாவத்தினிமித்தம் என்னால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் என்னுடைய மகிமையை இழந்து சாபத்திற்குள்ளாகி, வியாதிக்குள்ளாகி வேதனைப்படுகிறான்.

இப்போதும் என்னால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த என்னுடைய மகன் என்னோடு பேச விரும்புகிறான். பேச முடியாதபடி அவனுடைய நாவு கட்டப்பட்டுப் போயிற்று. நான் பேசுகிற வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறான்; கேட்க முடியாதபடி காது கட்டப்பட்டுப் போயிற்று. பாவம் எவ்வளவு கொடுமையானது என்பதை உணர்ந்து பெருமூச்சு விட்டார். பெருமூச்சு விட்டது மட்டுமல்ல, அந்த மனிதனைப் பார்த்து எப்பத்தா என்றார். அதற்கு திறக்கப்படுவாயாக என்று அர்த்தமாம். உடனே அந்த மனிதன் பேசினான், கேட்டான். அந்த இயேசு ஜீவிக்கிறார், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

நமது ஆண்டவர் இந்த உலகத்தில் மனிதனுகப் பிறப்பதற்கு முன்பும் அற்புதங்களைச் செய்தார். நம்மையெல்லாம் மீட்பதற்காக இந்த உலகத்தில் மனிதனுகச் சுற்றி அலைந்த நாட்களிலும் அற்புதங்களைச் செய்தார். நான் கர்த்தர், நான் மாருதவர் என்ற நமது ஆண்டவர் நேற்றும், இன்றும் என்றும் மாருதவராயிருக்கிறபடியினுல் இன்றும் அற்புதங்களைச் செய்கிருர். அற்புதங்களில் நம்முடைய் ஆண்டவருக்கு ஒப்பானவர்கள் வேறு யாருமே இல்லை. அவர் நாமம் அதிசயமானவர்; வல்லமையுள்ள தேவன் என்பது. அவராலே செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. உலக வைத்தியர்களாலும் சுகமாக்க முடியாத வியாதியையும் நீக்கி அவர்களுக்கு சுகமளிக்கிறவர். எனவே இது மனுஷரால் கூடாதது தான்; தேவனுல் கூடாத காரியம் ஒன்றுமில்லையென்ருர். வியாதியை உன்னை விட்டு விலக்குவேன். நானே உன்பரிகாரியாகிய கர்த்தர் என்ற நமது ஆண்டவர் நமது வியாதியைச் சிலுவையில் சுமந்து தீர்த்தார். அவர் தழும்புகளால் நாம் குணமாகிருேம்.

இயேசு நாதர் வியாதியைச் சுகமாக்கினது மட்டுமல்ல அந்த வியாதியைச் சுகமாக்கும் அதிகாரத்தைத் தமது சீஷருக்குக் கொடுத்தார். இயேசுவால் அதிகாரம் பெற்ற சீஷர்கள் அவருடைய நாமத்தினுல் வியாதியஸ்தர்களைச் சுகமாக்கினுர்கள். பிசாசினுல் கட்டப்பட்டு வேதனை அனுபவித்த மக்களைப் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவித்தார்கள். அந்த இயேசு தமது வல்லமையில் குன்றிப்போகவில்லை. அவர் மாருதவராயிருக்கிறபடியினுல் இப்பொழுதும் காலாகாலங்களில் தமக்குச் சித்தமான மக்களைப் பெயர் சொல்லி அழைக்கிருர். தாம் அழைத்து அதிகாரப்படுத்தின மக்களை அபிஷேகித்து அனுப்புகிருர். அவரால் அழைக்கப்பட்ட, அபிஷேகிக்கப்பட்ட, அதிகாரப்படுத்தப்பட்ட, அனுப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் இன்றும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிருர்கள். அவர்கள் அற்புத சுகமடைகிருர்கள்.

கடந்த பதினேழு வருஷமாக இதை நான் என் அனுபவத்தில் கண்டு தேவனை மகிமைப்படுத்தி வருகிறேன். கடந்த பதினேழு வருஷமாக இந்த ஊழியத்தின் பாதையில் இயேசுவால் அற்புத சுகமடைந்து அவருக்கு சாட்சியாக வாழ்ந்து வரும் ஆயிரம் ஆயிரமான

மக்களைக் குறித்து எனக்கு சாட்சியாகச் சொல்ல முடியும். ஒருநாள் நான் என் வீட்டில் எனது கடமைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் தொலைபேசியில் மணி அடித்தது. நான் தொலைபேசியை எடுத்து பேசுகிறது யாரென்று கேட்டேன். அப்போது ஒரு சகோதரி ஐயா! டாக்டர் ஸ்டீபன் வியாதிப்பட்டு ஆபத்தான நிலையில் இருக்கிறார். உடனடியாக ஜெபிக்க வரவேண்டுமென்று அழைத்தார். நானும் என் மனைவியுமாக டாக்டர் ஸ்டீபன் இருந்த ஆஸ்பத்திரிக்குச் சென்று அவரது அறையின் கதவைத் தட்டினோம். அவருடைய மனைவியார். கதவைத் திறந்தார். எங்களைப் பார்த்த மாத்திரத்தில் கண்ணீர் சிந்தி அழுது-சகோதரனே! நேற்று இரவு 8-30 மணிக்கு என்கணவனுருக்கு மறுபடியும் மாரடைப்பு ஏற்பட்டது. ஆறு டாக்டார்மார் இரவு முழுவதும் சிகிட்சை செய்து கைவிட்டுவிட்டார்கள். இந்த வேளையில் அவர்களுக்கு மோசமான முடிவு ஏற்பட்டால் எங்கள் குடும்பநிலை என்னவாகும்? ஆண்டவர் என்கணவனுருக்கு சுகமளித்தல்லாமல் நான் அவரை விடமாட்டேன். நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். நான் டாக்டர் ஸ்டீபன் பக்கத்தில் சென்று அவருடைய இருதயத்தில் கை வைத்து, ஆண்டவரே ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ எனனை மகிமைப் படுத்து வாயென்றீரே, இப்பொழுது ஆபத்தில் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன். இந்த குடும்பத்தின் நிலமையைப் பார்த்து இவர்களுக்கு இரங்கி சுகமளியும் எனறுஜெபித்தேன். உடனே டாக்டர் ஸ்டீபன் தன் கண்களைத் திறந்தார். அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் பாய்ந்தது. சகோதரனே, என் இருதய வேதனை என்னைவிட்டு நீங்கிற்று இனி இந்தவேதனை வராதபடிக்கு ஜெபியுங்கள் என்றார். நான் அவர்களைப்பார்த்து கவலைப்படாதிருங்கள். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள் என்று கூறி வீட்டிற்குத் திரும்பினேன். வீட்டில் வந்து ஏல்பெத்தேல் ஜெபவீட்டில் ஆண்டவர் சமுகத்தில் விழுந்து சற்று நேரம் போராடி ஜெபித்தேன்.

கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டார். என் விண்ணப்பம் அவர் சந்நிதியில் போய் எட்டிற்று. ஆண்டவர் அவருக்கு சுகம்

ளித்தார். என்ற நம்பிக்கை ஏற்பட்டதும் நான் எழும்பி என்கடமைகளைச் செய்தேன். மறுபடியும் மாலையில் நானும் என் மனைவியுமாக அவரைப்பார்ப்பதற்காகச் சென்றோம். நாங்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்றதும் அவருடைய மனைவியார் மிகுந்த மகிழ்சியுடன் இவ்வாறு கூறினார். சகோதரனே! நீங்கள் ஜெபித்து சென்ற பின்பு மறுபடியும் டாக்டரை அழைத்து என்கணவனுரின் இருதயத்தைப் பரிசோதித்தோம். அவர்களைப் பரிசோதித்த டாக்டர் ஒரு இந்து டாக்டர். அவர் பரிசோதித்துவிட்டு, அம்மா உங்கள் கணவனுருடைய இருதயத்தில் ஒரு அற்புதம் நடந்திருக்கிறது என்று கூறினார். நாங்கள் ஆண்டவரை நோக்கி ஜெபித்தோம் என்றேன். அதற்கு அவர் ஆம். உங்கள் ஆண்டவர் தான் சுகப்படுத்தியிருக்கிறார். இனிபயம் ஒன்று மில்லை என்று கூறினார் என்றார்கள். டாக்டர் ஸ்டீபன் பூரண சுகமடைந்து இன்று ஆண்டவருக்கு சாட்சியாக ஜீவித்து வருகிறார்.

கர்த்தருடைய பிள்ளையே! நீங்கள் வியாதிப்பட்டிருக்கிருக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு அருமையானவர்கள் வியாதிப்பட்டிருக்கிறார்களா? டாக்டர்மார் பயங்கரமான காரியங்களைச் சொல்லுகிறார்களா? அதற்காக நீங்கள் பயப்படவேண்டாம் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்கள் வியாதியை நீக்கி உங்களைச் சுகப்படுத்த வல்லவராயிருக்கிறார். நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். விசுவாசித்தால் எல்லாம் கூடும். விசுவாசித்தால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை. கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து வியாதியஸ்தர் மீது உள்ளம் உருகி சுகமளிக்கிறவர்.

6

கிறிஸ்து பசித்தவர்களுக்காக பரிதபித்து உணவளிக்கிறவர்.

கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். நீதிமான்களுடைய பிள்ளைகள் அப்பத்திற்கு இரந்ததைக் காணவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் ;கர்த்தரைத்

தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. இயேசு நாதர் பசித்தவர்கள் மீதும், வறுமையால் வாடுகிற மக்களிடத்திலும் இரக்கமும் மனஉருக்கமும் நிறைந்தவர். எனவே, மாற் 8:1ம் 2ம் 3ம் வசனங்களைப் படிக்கிற போது "அந்த நாட்களிலே திராளான ஜனங்கள் கூடி வந்திருக்கையில், அவர்கள் சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாத போது, இயேசு தம்முடைய சீஷரை அழைத்து, ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன். இவர்கள் இப்பொழுது என்னிடத்தில் தங்கியிருந்த மூன்று நாளாய் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் இவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்களே" என்று கூறியிருப்பதைக் காண்கிறோம்.

இந்த சம்பவம் உங்களுக்கு நன்றாகத் தெரிந்த சம்பவமே. இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியம் செய்து வந்த நாட்களில் ஒருமுறை அவர் வனாந்திரத்தில் இருக்கிறார் என்பதை அறிந்த ஜனங்கள் கால்நடையாக நடந்து அவருடைய போதனையைக் கேட்கும்படி வனாந்திரத்தில் கூடினார்கள். தன்னை நாடி வந்த மக்களுக்கு ஆண்டவர் சுவிஷேசத்தைப் பிரசங்கித்தார். ஒருநாள்-இரண்டுநாள்-மூன்றுநாள் இயேசு தொடர்ந்து பிரசங்கம் செய்கிறார். மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளினாலும் பிழைப்பான் என்று கூறியிருப்பதைப் போல் கிறிஸ்துவின் போதனையைக் கேட்டு மக்கள் சரீரப்பசியை மறந்திருந்தார்கள். மூன்றாம் நாள் இயேசு பிரசங்கத்தை முடித்து இவ்வாறு கூறினார். அவர் கூறினது மட்டுமல்ல அங்கே இருந்த ஏழு அப்பங்களையும் சில சிறு மீன்களையும் ஆசீர்வதித்து பகிர்ந்து கொடுக்குமாறு கட்டளையிட்டார். எல்லாரும் சாப்பிட்டுத்திருப்தியடைந்தார்கள். சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம்பேர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நமது ஆண்டவர் கூப்பிடுகிற காக்கைக்குஞ்சுகளுக்கு உணவளிக்கிறவர். சமுத்திரத்தில் வாழும் கொடிய திமிங்கலமும் இரைக்காக அவரை நோக்கிப் பார்க்கிறது. அந்த திமிங்கலத்திற்கும் ஏற்றவேளையில் உணவளிக்கிறார். காட்டில் வாழும் பொல்லாத சிங்கமும் இரைக்காக அவரை நோக்கி கெர்ச்சிக்கிறது. அந்த சிங்கத்திற்கும் உணவளிக்கிறார்

ஆகாயத்துப் பறவைகளுக்கும், சமுத்திரத்து மச்சங்களுக்கும், காட்டில் வாழும் கொடிய மிருகங்களுக்கும் உணவளிக்கிற ஆண்டவர் தமது மக்களைப் போஷியாமல் இருப்பாரோ ? எனவே இயேசு நாதர் "ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் இல்லை அறுக்கிறதும் இல்லை. அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா ? காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப் பாருங்கள். சாலமோன் ராஜா முதலாய் தன்னுடைய சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருக்கவில்லை. அற்ப விசுவாசிகளே, இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாய் உடுத்துவிப்பாரானால் உங்களை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா ? நீங்கள் உணவுக்காகவும், உடைக்காகவும் கவலைப்பட வேண்டாம். நாளைத்தினத்திற்காகவும் கவலைப்படவேண்டாம். முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடகொடுக்கப்படும் " என்றார். அந்த ஆண்டவர் தமதுவார்த்தைகளில் ஒன்றிலாவது தவறிப் போகவில்லை ? அவர் மனம் மாற ஒரு மனிதனல்ல.

இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது வருஷமாக வனாந்திரத்தில் மன்னாவாலும், காடை இறைச்சியாலும் போஷித்தார். உத்தேசம் இருபது லட்சம் ஜனங்கள் கானானுக்குப் பிரயாணமாய்ச் சென்று கொண்டிருந்தார்கள். வழியிலே அவர்கள் இறைச்சிக்காக முறுமுறுத்த போது அவர்கள் தின்று சலித்துப் போகிற வரைக்கும் காடை இறைச்சியைக் கொடுத்தார். இது அற்பமான காரியமா ? வழியிலே தண்ணீர் இல்லாமல் போன போது கன்மலையைப் பிளந்து அவர்களுக்கு தண்ணீரைக் கொடுத்தார். நாற்பது வருஷம் பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் வஸ்திரங்கள் பழமையாகவில்லை. இன்று மனிதன் அறிவுப் பெருக்கத்தினால், விஞ்ஞான அறிவினால் என்னவெல்லாமோ புதிய புதிய காரியங்களைக் கண்டுபிடிக்கிறான், நாற்பது வருஷம் வெயிலுக்கும், மழைக்கும், பனிக்கும் பழமையாகாத கெட்டுப்போகாத வஸ்திரங்களையும், பாதரட்சைகளையும் கண்டுபிடித்திருக்கிறானா? வனாந்திரத்தில் 40 வருஷமாக அவர்கள் வஸ்திரங்கள் பழமையாகவில்லை. பாதரட்சைகள் கெட்டுப் போகவில்லை.

எலியா தீர்க்கத்தரிசி இராஜாவிற்கு பயந்து கேரீத் ஆற்றண்டையில் ஒழித்திருக்கிறன். எந்த இராஜாவிற்கு, பயந்து ஆற்றில் ஒழித்திருந்தானோ, அதே இராஜ கொட்டாரத்திலிருந்து அப்பத்தையும் இறைச்சியையும் காகத்தின் மூலம் அனுப்பி போஷிக்கிறார். இந்த எலியா யேசபேலுக்குப் பயந்து, வாழ்க்கையில் வெறுப்படைந்து, நான் சாகத்தான் வேண்டுமென்று சூரைச் செடியின் கீழ் படுத்திருந்த வேளையில் பரலோகத்தின் தூ த னை அ னு ப் பி அப்பத்தையும் தண்ணீரையும் கொடுத்து அவனைத் தேற்றினார். அந்த இயேசு ஜீவிக்கிறார். அவர் இன்றும் தமது மக்களைக் கைவிட்டதில்லை.

கடந்த பதினேழு வருஷங்களுக்கு முன்பு இயேசு நாதர் இந்த மகிமையான சுவிசேஷ ஊழியத்திற்கு என்னை அழைத்தார். அந்த நாள் என் வாழ்க்கையில் அதிகப் போராட்டம் நிறைந்த நாளாய் இருந்தது. நான் ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே! நான் இளமையிலிருந்து ஆடம்பரமாய் வளர்க்கப்பட்டிருக்கிறேன். நான் வேலை பார்க்கிறேன். என் மனைவி வேலை பார்க்கிறாள். வாழுவதற்கு தேவையான சகல வசதிகளும் எனக்குக் கிருபையாய் அளித்திருக்கிறீர். இப்படியிருக்க நான் என் வேலையை ராஜினாமா செய்து பரதேசியாய் உமக்கு ஊழியம் செய்ய வர வேண்டுமென என்னை அழைக்கிறீரே - நான் என் வேலையை ராஜினாமா செய்தால் என் பிற்கால வாழ்க்கை எப்படியிருக்கும். என் மனைவியின் நிலமையென்ன? என் பிள்ளைகளின் வாழ்வு என்ன ஆகிறது என்று கேட்டேன். அப்பொழுது அருமை நாதர் இயேசுகிறிஸ்து, என் மகனே! உன்னை இரட்சிப்பதற்காக நான் பரலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தேன். உனக்காகச் சிலுவைப் பரியந்தம் என்னைத் தாழ்த்தினேன். உனக்காக என்னுடைய இரத்தத்தையெல்லாம் சிந்தி ஜீவனை விட்டேன். மகனே! என் இரத்தத்தை விட, ஜீவனைவிட உலக வாழ்வு உனக்குப் பெரிதா என்றார்.

நான் இயேசுவே! உம்முடைய அன்பு பெரியது. உமது அன்பின் ஆழம், நீளம், உயரம் அளவிட முடியாதது. பாதகனாகிய எனக்காக பரலோகத்தை விட்டு இந்த பூலோகத்திற்கு வந்து இரத்தம் சிந்தி ஜீவனை விட்டீர். இந்த அன்பிற்கு என் வாழ்வு ஈடாகாது என்று கூறி நான் என் வேலையை ராஜினாமா செய்தேன். என் மனை

தன் வேலையை ராஜினுமா செய்தாள். நாங்கள் இரண்டு பேரும் எங்கள் வேலைகளை ராஜினுமா செய்துவிட்டு எங்களுக்குத் தெரியாத தூத்துக்குடி பட்டணத்திற்கு இந்த ஊழியத்தைச் செய்வதற்காக கிறிஸ்துவின் கட்டளைப்படி புறப்பட்டோம்.

அப்படி புறப்படுகிற வேளையில் என்னுடைய கைகளில் இருபத்தைந்து ரூபாய் தான் இருந்தது. அப்பொழுது நான் ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே! இன்று வரைக்கும் எனக்குத் தேவையானதை இன்னொரு மனிதனிடத்தில் கேட்க வேண்டிய நிலமை எனக்கு இருந்ததில்லை. இன்று உமக்காக எனக்கு இருக்கிற எல்லாவற்றையும் இழந்து நான் பரதேசியாய் போகிறேன். ஆகவே இன்று முதல் எனக்கோ, என் மனைவி பிள்ளைகளுக்கோ தேவையானதொன்றையும் யாரிடத்திலும் கேட்பதில்லை. நீராக உமக்குச் சித்தமான மக்கள் உள்ளத்தில் பேசி எங்களுக்குக் கொடுத்தால் அதைப் பெற்றுக்கொள்வோம். இல்லாவிட்டால் உமக்காக எந்த கஷ்டங்களையும் பொறுமையோடு சகிப்போம். உம்முடைய மகிமையான ஊழியத்தைச் செய்வதற்காக மக்கள் எங்களுக்குக் கொடுக்கிற பணத்தில் எனக்கோ, என் மனைவி பிள்ளைகளுக்கோ தேவையான துணிகளையோ, மற்றும் பொருள்களையோ நாங்கள் வாங்குவதில்லை. யாராவது எங்கள் சொந்த தேவைக்கென்றுகொடுத்தால் பெற்றுக்கொள்வோம் என்று இரண்டு தீர்மானங்களோடு புறப்பட்டு வந்தேன். எந்த உள்நாட்டுச் சபைகளோ, சங்கங்களோ, வெளிநாட்டுச்சபைகளோ, சங்கங்களோ எங்களை ஆதரிக்கவில்லை. பலர் எங்களுக்கு விரோதமாக பொய்யாக பேசிச்செல்வது போல எந்த வெளி நாடுகளிலிருந்தும், எந்த ஸ்தாபனங்களும் எங்களுக்கு உதவி செய்யவில்லை. நாங்களும் யாரையும் சார்ந்திருக்கவில்லை. வேலைக்காரிகளுடைய கண்கள் எஜமாட்டிகளின் கரங்களை நோக்கி இருக்குமாப்போல; நாங்கள் எங்கள் நேச எஜமானுகிய கிறிஸ்து இயேசுவை நோக்கிப் பார்க்கிறோம். அவர் காலாகாலங்களில் தமக்குச் சித்தமான மக்கள் உள்ளங்களில் பேசி எங்களை நேசித்துப் போஷித்து பராமரித்து பாதுகாத்து அற்புதமாய் வழிநடத்தி வருகிறார்.

ஒருநாள் ஏல் பெத்தேல் ஜெபவீட்டில் நான் பிரசங்கம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது தூத்துக்குடியிலிருந்து

உத்தேசம் 50 மைல்களுக்கு அப்பாலிருக்கும் தேவர்குளம் என்ற இடத்திலிருந்து ஒரு சகோதரன் ஆராதனையில் வந்து பங்குபெற்று தேவனுடைய செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆராதனை முடிந்த பின்பு நான் அவரிடம் வந்து சகோதரனே! தூரத்திலிருந்து வந்திருக்கிறீர்களே, ஏதாவது விசேஷம் உண்டாவென்று கேட்டேன். அவர் ஆம் ஐயா! நேற்று இரவு நான் நித்திரைக்குச் சென்றபோது ஆவியானவர் என்னைத் தூத்துக்குடிக்குப் போகுமாறு சொன்னார். நான் நாளை ஞாயிற்றுக்கிழமையாக இருக்கிறதே, எப்படி போகவென்று ஆலோசித்துக் கொண்டிருந்தேன். ஆண்டவர் மறுபடியும் மறுபடியுமாக என்னைத் தூத்துக்குடிக்குப் போகுமாறு வற்புறுத்தினார். இரவு எனக்கு நல்ல நித்திரை இல்லை. காலை எழும்பி நான் தூத்துக்குடிக்குப் போவதற்கு மனமற்றவனாக ஆலயத்திற்குப் போக வேண்டுமென தீர்மானித்துக் குளித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஆலயத்தில் மணி அடித்தது. ஆவியானவர் திரும்பவும் என்னைத் தூத்துக்குடிக்குப் போகுமாறு கட்டளையிட்டார். நான் என் மனைவியிடம் வந்து நேற்று இரவிலிருந்து ஆண்டவர் தொடர்ந்து நான் தூத்துக்குடிக்குப் போகுமாறு என்னை வற்புறுத்துகிறாரென்று கூறினேன். கர்த்தர் சொல்வாரானால் அதற்குக் காரணம் இல்லாமலிராது. நீங்கள் ஆண்டவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து தூத்துக்குடிக்கு உடனேயே புறப்பட்டுச் செல்லுங்கள். சகோதரன் ரோஸ்பாண்டியனைப் பார்த்து ரொம்ப நாட்களாகி விட்டது என்று என்னை அனுப்பி வைத்தார்களென்று கூறி என் கையில் ஒரு பையைக் கொடுத்தார். அந்தப் பை நிறைய அரிசி இருந்தது. நான் என் மனைவியிடத்தில் கொடுத்தேன். என் மனைவி அதை வாங்கிப் பார்த்து விட்டுச் சொன்னாள்; இன்று நமது வீட்டில் சமைப்பதற்கு அரிசியில்லை வாங்குவதற்கு காசுமில்லை, நமது தேவைக்கும் அதிகமான அரிசியைத் தேவன் அனுப்பியிருக்கிறார் என்றாள். இப்படித்தான் கடந்த 17 வருஷமாக தேவன் எங்களை அற்புதமாக போஷித்து வழி நடத்துகிறார்.

ஒருமுறை ஒரு கன்வென்ஷன் கூட்டத்திற்குப் பேசுவதற்காகச் சென்றேன். மத்தியானம் அந்த இடத்தின் பக்கத்திலுள்ள பட்டணத்தில் நான் இறங்கினேன். எனக்கு நல்ல பசி, சாப்பிடுவதற்கு கையில் காசு இல்லை. அப்படி நான் பசியோடு இறங்குகிற வேளையில் எனக்குத் தெரிந்த ஒரு சகோதரன் அங்கு நின்றார். அவர் என்னைப் பார்த்து சகோதரனே! நீங்கள் என்னோடு சாப்பிட வரவேண்டுமென

என்னை வற்புறுத்தி ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். ஹோட்டலில் போய் உட்கார்ந்ததும் சொன்னார், இப்பொழுது நான் இங்கு வருவதற்கு எந்த அவசியமும் கிடையாது. இந்த மத்தியான வேளையில் வழக்கமாக நான் இங்கு வருவதும் இல்லை. நான் வீட்டில் உட்கார்ந்திருந்தபோது ஆண்டவர் என் மகன் வருகிறான் நீ உடனடியாக புறப்பட்டுப் போ என்று என்னை அனுப்பினார். நான் இங்கே வந்து ஆண்டவருடைய பிள்ளை யார் வருவது என்று பார்த்துக் கொண்டே நிற்கிறேன். நீங்கள் தான் வருகிறீர்கள் உங்களுக்காகத் தான் கர்த்தர் என்னை அனுப்பியிருக்கிறாரென்று கூறி எனக்குச் சாப்பாடு வாங்கிக் கொடுத்து விட்டு அவர் தனது வீட்டிற்குத் திரும்பினார்.

பிரியமான தேவனுடைய பிள்ளையே ! என் வீட்டில் சமைப்பதற்கு அரிசி இல்லை. ஆண்டவர் என் குடும்பத்தின் மீது கவலை நிறைந்தவராயிருக்கிறார். 50 மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஒரு சகோதரன் உள்ளத்தில் போராடி அவர் மூலம் எனக்குத் தேவையான அரிசியை அனுப்பி வைக்கிறார். நான் பசி நிறைந்தவனாக ஊழியத்திற்குச் செல்லுகிறேன். தமது ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தர்; தமது ஊழியக்காரனுக்காக பரிதபிக்கிற கர்த்தர் வீட்டில் இருந்த ஒரு சகோதரனை என் மகன் வருகிறான் போய்ப் பார் என்று கட்டளை கொடுத்து அனுப்பி அவர் வந்து எனக்கு வேண்டிய ஆகாரத்தை வாங்கிக் கொடுத்து விட்டுச் செல்லுகிறார். தமது மக்கள் மீது நமது ஆண்டவர் எவ்வளவு கவனமுடையவராக இருக்கிறார். தமக்குப் பயந்தவர்களுக்கு நன்மை செய்ய கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் சுற்றி உலாவுகிறது.

தேவனுடைய பிள்ளையே ! நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஐயோ ! என் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறதே, என் குடும்பம் மிகவும் பெரிய குடும்பமாக இருக்கிறது. இந்த விலைவாசி அதிகரித்துக் கொண்டே செல்லும் காலத்தில் நான் எப்படி என் குடும்பத்தை நடத்துவேன் என்று எண்ணியா கவலைப்படுகிறீர்கள் ? நீங்கள் கவலைப்பட வேண்டாம். நமது ஆண்டவர் ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் கொண்டு ஆயிரம் ஆயிரமான மக்களைப் போஷித்தவர் என்பதை மறந்து விட்டீர்களா? கலசத்திலி

ருந்த கொஞ்சம் எண்ணெயையும், பானையிலிருந்த கொஞ்சம் மாவையும் ஆசீர்வதித்து பஞ்சகாலம் முழுமைக்கும் தமது பிள்ளைகளுக்கு உணவளிதவரல்லவா நமதாண்டவர்? எனவே அவர் உங்களை ஆசீர்வதிப்பாரானால் உங்கள் வருமானம் கொஞ்ச மாயிருந்தாலும் அது உங்களுக்குத் திருப்தியாகச் செய்வார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் தமது மக்களைப் போஷித்து பராமரித்து பாதுகாக்கிறவர்.

7

கிறிஸ்து ஆறுதலற்று கலங்கித் தவிக்கிறவர்களுக்கு ஆறுதலளிக்கிறவர்

நமதாண்டவர் கவலையை நீக்குகிறவர், கண்ணீரைத்துடைக்கிறவர். ஒருவனை அவன்தாய் தேற்றுவது போல தேற்றுகிறவர். சோர்ந்து போகிறவனுக்குப் பெலனையும் சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தையும் பெருகப்பண்ணுகிறவர். தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறப்பேனோ? தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும் கர்த்தர் உன்னைச் சேர்த்துக்கொள்வாரெனெ வாக்களித்தவர். ஆறுதலற்று கலங்கித் தவிக்கிற மக்களுக்கு அவர் ஆறுதலளிக்கிற வராயிருக்கிற படியினால் லூக். 7:13ம் வசனத்தில் "அவள் மேல் மனதுருகி கிட்டவந்து பாடையைத் தொட்டு அழாதே" என்று கூறியிருப்பதைக் காண்கிறோம். யாரைப்பார்த்து இயேசு நாதர் இவ்வாறு சொன்னார் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதனாகச் சுற்றி அலைந்து ஊழியம் செய்து வந்த நாட்களில் ஒருமுறை நாயினூர் என்னும் கிராமத்திற்குச் சென்றார். அந்தகிராமத்தின் வாசலை அவர் சமீபிக்கிறபோது தூரத்தில் இறந்துபோன ஒரு மனிதனின் சரீரத்தைப் பாடையில் வைத்து திரளானஜனங்கள் கொண்டுவருகிற காட்சியைக்கண்டார். அவர் அந்த கூட்டத்தை உற்று கவனிக்கிறவேளையில் ஒருஸ்திரீ

யானவள் தன்மார்பில் அடித்து கதறி அழுகிற பரிதாபமான காட்சியைக் கண்டார். அவள் ஒரு விதவையானவள்; இறந்துபோன அந்த வாலிபனின் தாய்; அவன் அவளுக்கு ஒரே மகனுயிருந்தான். தனக்கு அருமையான ஒரே மகனை மரணத்திற்குப் பறிகொடுத்து அந்த ஏழைத் தாய் அழுது கொண்டுவருகிற காட்சியைப் பார்த்ததும் ஆண்டவரின் உள்ளம் உருகிற்று. அந்த பாடை தன்னை சமீபித்தது வருகிறவரைக்கும் பொறுமையோடிருந்தார். அந்த பாடை தன்னை சமீபித்ததும் அவர் அந்த ஸ்திரீயைப் பார்த்து அழாதே என்று கூறினர். பின்பு அவர் பாடையைத் தொட்டு இறந்துபோன அந்த வாலிபனைப் பார்த்து வாலிபனே எழுந்திரு என்ருர். உடனே இறந்து போன வாலிபன் ஜீவனேடு எழும்பினுன். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்து அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதலளித்து அனுப்பினுர்.

கலங்கித் தவிக்கிற மக்களுக்கு நமது ஆண்டவர் ஆறுதலளிக்கிறவர். எனவே தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒருநாள் பெத்தானியா என்ற கிராமத்திற்குச் சென்ருர். அங்கே தங்களுக்கு அருமையான ஒரே சகோதரனுகிய லாசரு என்பவனை மரணத்தினுல் இழந்து மார்த்தாள், மரியாள் என்கிற இரண்டு சகோதரிமார் கலங்கித்தவித்துக் சொண்டிருந்தார்கள். இயேசு நாதர் அவர்களைத்தேடிச் சென்றபோது இறந்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் வந்து போதகரே நீர் இங்கே இருந்திருப்பீராஞல் என்சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்று சொல்லி அழுதாள். இயேசு உன் சகோதரன் உயிரோடு எழும்புவான் என்ருர். பின்பு அவர் இறந்தவனுடைய சகோதரியாகிய மரியாளைப்பார்க்க விரும்பினுர். போதகர் வந்திருக்கிருர் உன்னை அழைக்கிருர் என்று அவளுக்குச் சொன்னுர்கள். உடனே மரியாள் கிறிஸ்து இயேசுவினிடத்தில் விரைந்து கதறி அழுதாள். மார்த்தாள், மரியாள் அழுவதையும் கூடஇருந்த யூதர்கள் அழுவதையும் இயேசு கண்டபோது இரக்கமும் மன உருக்கமும் நிறைந்த இறைவன் இயேசு உள்ளம் உருகினுர். அவர்களோடு சேர்ந்து கண்ணீர் சிந்தி அழுதார். ஆம் அன்பான தேவனுடைய பிள்ளையே! நமது ஆண்டவர் நமது துக்கம் துயரத்தில் பங்குபெற்று நம்மோடு சேர்ந்து கவலைப்படுகிறவர். அவர் கண்ணீர் விட்டு அழுது லாசருவை எங்கே வைத்தீர்களென்று கேட்

டார். கேட்டு அவன் கல்லறையின் அருகில் நின்று கல்லறையை மூடியிருந்த கல்லை எடுத்து விடுங்கள் என்ருர். ஆண்டவரே நாலு நாள் ஆயிற்றே நாறுமே என்ருர்கள். இல்லை கல்லை எடுத்துவி டுங்கள் என்ருர். கல்லை எடுத்தபோது லாசருவே வெளியே வா என்ருர். உடனே இறந்து நாலுநாளாகி நாறிப்போன லாசரு வெளியே வந்தான். அவன் கட்டுகளை அவிழ்த்து விடச்சொல்லி அந்த கலங்கித்தவித்த சகோதரிமாரை ஆற்றித் தேற்றி அனுப் பினுர். அந்த இயேசு ஜீவிக்கிருர். நேற்றும் இன்றும் என்றும் மாரு தவராயிருக்கிருர்.

கடந்த சிலவருஷங்களுக்கு முன்பு திருநெல்வேலிமாவட் டத்தில் திருச்செந்தூர் பக்கமிருக்கிற அழகப்பபுரம் என்ற ஒரு கிராமத் தில் ஒரு ஆவிக்குரிய கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றிருந்தேன். ஒருநாள் நானும் என் மனைவியும் வண்டிப்பெரியார் C. S. I. ஆலயத்தில் குருவானவராக இருக்கிற மறைதிரு. ஜெபமணி அவர்கள் மனைவியா ருமாக பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது திடீரென்று ஒரு வீட் டிற்கு முன்னுல் அழுகிற சத்தத்தைக் கேட்டோம். நான் வெளியே வந்து சகோதரியை அழைத்து அம்மா! அந்த வீட்டில் ஏன் அழுகி ருர்கள் என்று கேட்டேன். அப்பொழுது அவள் ஐயா! அந்த வீட் டின் மேல்மாடியில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தை கால் தவறி கீழேவிழுந்து இறந்துபோயிற்று. ஆகையால் அந்தவீட்டார் அழுது கொண்டிருக்கிருர்கள் என்று சொன்னுள்.

நான் மறைதிரு ஜெபமணி அவர்கள் மனைவியாரிடத்தில் ஒரு குழந்தை இறந்து போயிற்ரும். ஆகையால் குடும்பத்தினர் அழுகிருர்களென்று சொன்னேன். அதற்கு அவர்கள் ஐயா! எங்கள் கிராமம் மிகவும் சிறிய கிராமம். இங்கே உங்களை அழைத்தபோது நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். இந்த சின்ன கிராமத்திற்கு சகோதரன் வருவார்களா? அப்படியே நமது அழைப்பை ஏற்றுக் கொண்டு நம் மத்தியில் வந்தாலும் அவர்களுக்கு எப்படி வசதியைச் செய்து கொடுப்போமென பலவாறு சிந்தித்தோம். தேவனுடைய பிள் ளையாகிய நீங்கள் எங்கள் அழைப்பை அன்போடு ஏற்றுக்கொண்டுஎங் கள் மத்தியில் வந்து இந்த கிராமத்தின் வசதிக் குறைவுகளையெல்லாம்

பெரிதென்று பாராமல் மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்து கொண்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய பிள்ளையாகிய நீங்கள் எங்கள் மத்தியில் இருக்கும்போது நிச்சயமாக தேவன் இப்படி ஒரு தீங்கான காரியத்தைச் செய்யவே மாட்டார், தமது நாமத்தை மகிமைப்படுத்தத்தான் செய்வார். ஆகையால் ஜெபிப்பதற்கு ஒரு தருணம் கிடைக்குமா வென்று பார்த்து வருகிறேன் என்று சொன்னார்கள்.

நான் எனக்குக் கொடுக்கப்பட்ட அறையில் நின்று கொண்டிருந்தேன். சற்று நேரத்திற்குப் பின் ஒருசகோதரன் தன் தோளில் ஜீவனிழந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு எனக்கு நேராக ஓடி வருகிற காட்சியைக் கண்டேன். இதைக்கண்டவுடன் நான் ஆண்டவரே, அன்று நாயினூர் விதவை தன்மகனை இழந்து கண்ணீரும் கவலையுமாய் வந்தபோது அவள்மீது மனதிரங்கி அந்த பாடை கிட்ட வருகிறவரைக்கும் பொறுமையாக நின்று, பாடை கிட்டவந்ததும், பாடையைத் தொட்டு, வாலிபனே எழுந்திரு என்று சொல்லி, ஜீவனிழந்த வாலிபனுக்கு ஜீவனைக் கொடுத்து, அவள் கண்ணீரைத் துடைத்து ஆறுதலளித்தீர். இப்பொழுது ஒரு தகப்பன் ஜீவன் இழந்து போன தனது குழந்தையை உமக்கு நேராக கொண்டு வருகிறார். நீர் அவருக்கு இரங்கி அவர் கண்ணீரைத் துடைத்து ஆறுதலளித்து அனுப்பும் என்று ஜெபித்துக் கொண்டு நின்றேன். இதற்குள்ளாக அந்த சகோதரன் விக்டர் சாமுவேல் என் பக்கத்தில் வந்து விட்டார். வந்து தனது ஜீவன் இழந்த குழந்தையை எனக்கு நேராக நீட்டினார். உடனே நான் அந்தக் குழந்தையின் தலையில் கை வைத்து, நசரேயனாகிய இயேசுவே உம்முடைய ஜீவனுள்ள நாமத்தினால் இந்தக் குழந்தையை உயிர்ப்பியும் என்று ஜெபித்தேன். உடனே அந்தக் குழந்தை தன் கண்களைத் திறந்தது. நான் கொஞ்சம் தண்ணீரைக் கொண்டு வருமாறு சொல்லி அதை ஜெபித்து அந்தக் குழந்தையைக் கீழே நிறுத்தச் சொல்லி அதற்குக் கொடுத்து அழைத்துக்கொண்டு செல்லுமாறு கூறினேன். சகோதரன் விக்டர் சாமுவேல் திருநெல்வேலி மாவட்டத்தில் ரெட்டியார்பட்டி என்ற ஒரு இடத்திலுள்ள பள்ளிக் கூடத்தில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து வருகிறார். தன் ஜீவன் இழந்து போன குழந்தைக்கு ஆண்டவர் ஜீவன் அளித்தபடியால் அந்த இடத்தில் ஒரு கன்வென்ஷனை தனது சொந்தச் செல

வில் வைத்து என்னை அதில் போவதற்காக அழைத்து ஆண்டவர் நாமத்தை மகத்துவப்படுத்தினார்.

கர்த்தருடைய பிள்ளையே! நீங்கள் ஏன் கலங்கி தவிக்கிறீர்கள்? ஆண்டவர் இயேசு நமது கண்ணீரைத் துடைத்து நமக்கு ஆறுதலளிக்கிறவர். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் ஆறுதலற்று கலங்கித்தவிக்கிற மக்களுக்கு ஆறுதலளிக்கிறவர்.

8

கிறிஸ்துசமாதானத்தை இழந்து தவிக்கிற மக்களுக்கு சமாதானமளிக்கிறவர்

வாழ்க்கையில் சமாதானத்தைப் பெற்று வாழுவதற்காக மனிதன் எவ்வளவோ முயற்சிகளைச் செய்கிறான். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த அல்லும்பகலும் அயராமல் பாடுபட்டு உழைக்கிறான். ஏராளம் பணம் இருந்தால், பெரிய பட்டம் பதவியிருந்தால் மாய சிற்றின் பங்களை அனுபவித்து விட்டால் வாழ்க்கையில் சமாதானமாக வாழலாம் என்று மனிதன் எண்ணுகிறான். பணம், பட்டம், பதவி மனித வாழ்க்கையில் நிலையான சமாதானத்தைக் கொடாது. நான் எனது வாழ்க்கையில் சமாதானம் இல்லாதிருந்தேன். எனக்கு வேலையிருந்தது. என் மனைவிக்கு வேலை இருந்தது. வாழுவதற்குத் தேவையான சகல வசதியும் இருந்தது. ஆனால் நான் சமாதானமில்லாதவனாக இருந்தேன். ஒரு நாள் இயேசுவின் சிலுவையின் அடிவாரத்தில் வந்தேன். அவரது சிலுவையின் இரத்தம் என்னிலே தெளிக்கப்பட்டது. உலகம் கொடுக்காத எடுக்காத சமாதானத்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால்பெற்றுக்கொண்டேன். இதையறிந்த பவுல் கொலோ. 1:20 -ல் " அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் " என்று எழுதினான்.

கிறிஸ்துவின் நாமமே சமாதானப்பிரபு எனப்படுவது. ஆகவே ஏசாயா தீர்க்கத்தரிசி ஏசாயா 9:6 -ம் வசனத்தில் "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு எனப்படும்" என்று கூறினர். இயேசுவே சமாதானத்தை அளிக்கிறவராயிருக்கிறபடியினுல் யோவான் 14:27 -ம் வசனத்தில் "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக" என்றார்.

இந்த ஊழியத்திற்கு வருவதற்கு முன்பு நான் ஒருக்காலும் பசியாயிருந்ததில்லை. கந்தையான வஸ்திரங்களைத் தரித்ததில்லை. நிந்தையான வார்த்தைகளைக் கேட்டதில்லை. கடந்த பதினேழு வருஷமாக கடந்து வருகிற சுவிசேஷத்தின் பாதை எவ்வளவோ காடுமுரடானது, கல்லு முள்ளு நிறைந்தது. எத்தனையோ காட்டாறுகளை நான் கடந்து வந்திருக்கிறேன். எவ்வளவோ நிந்தைகளையும், அவமானங்களையும் சகித்திருக்கிறேன். சகித்துக் கொண்டுமிருக்கிறேன். ஆனால் ஆண்டவர் இயேசுவால் கிடைத்த சமாதானம் என் இருதயத்தைவிட்டு நீங்கவே இல்லை. உலகம் கொடுக்காத, உலகம் எடுக்காத சமாதானத்தை கிறிஸ்துவின் இரத்தத்தின் புண்ணியத்தினுல் பெற்றுக்கொண்டேன்.

இதைப்படிக்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் சமாதானத்துடன் உங்கள் நாட்களைக் கழித்து வருகிறீர்களா? உங்களுக்கு வாழுவதற்கு எத்தனையோ வசதிகளைக் கர்த்தர் கொடுத்திருக்கிறார். நல்ல வீடு, அருமையான கணவன்; அன்பான மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல வேலை, நிறைய சொத்துக்கள் யாவற்றையும் தேவன் உங்களுக்கு நிறைவாகத் தந்திருந்தும், அடிக்கடி வாழ்க்கையில் சமாதானமில்லாதிருக்கிறீர்களே! காரணம் என்ன? எத்தனையோ நாட்களை நித்திரையில்லாமல் வேதனையோடு நாட்களைக் கடத்துகிறீர்கள். நீங்கள் விரும்புகிற உணவை உங்களுக்கு முன்னுல்

வைத்தாலும் சாப்பிடுவதற்கு மனமில்லாமல் எழும்பிச் செல்லுகிறீர்கள். அடிக்கடி படுக்கையில் நித்திரையில்லாமல் பெருமூச்சோடு இரவைக் கடத்துகிறீர்கள். உங்களுக்கு நேர்ந்தது என்ன ? இதோ ! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களைப் பார்த்து வருத்தப்பட்டு, பாரம்சுமக்கிற என் பிள்ளைகளே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைக்கிறார். இந்த உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். தேவர்கள் என்று அழைக்கப்பட்டு வாழ்ந்து மறைந்த பல பெரியவர்கள்உண்டு. ஆனால் ஒரே ஒருவர் தான் மனுக்குலத்தைப் பார்த்து வருத்தப்பட்டு பாரம்சுமக்கிற மக்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்று அழைத்த அவர் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. அவருக்கு மாத்திரம் தான் அவ்வாறு அழைக்க அதிகாரம் உண்டு. அவர் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுடையவர். அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்.

இன்று உலகம் சமாதானத்தை இழந்து தவிக்கிறது. உலக சமாதானத்திற்காக நாட்டின் தலைவர்கள் எவ்வளவோ முயற்ச்சிகளை செய்கிறார்கள். எத்தனைக்கு அதிகமாக பிரயாசப்படுகிறார்களோ அத்தனைக்கு அதிகமாக உலகமானது கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. காலஞ்சென்ற இந்திய நாட்டின் பிரதம மந்திரியாகிய பண்டித ஜவஹர் லால் நேரு, ரஷியா பிரதமராகிய குருஷேவ், அமெரிக்கா ஜனாதிபதியாகிய கென்னடி ஆகியோர் உலகசமாதானத்திற்காகஅதிகமாகப் பாடுபட்டு உலக மக்களால் சமாதான கர்த்தா, சமாதான தூதர்கள் என்று அன்போடு அழைக்கப்பட்டார்கள். உலகம் நாட்டின சமாதானத்தைப் பெற்றுக் கொண்டதா ? இல்லை. உலகத்தின் பல்வேறு நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து உலக சமாதானத்திற்காக ஐக்கிய நாடுகளின் சங்கமென்று ஒன்றை ஸ்தாபித்து பிரயாசப்படுகிறார்கள். என்றாலும் உலகம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதையறிந்த பவுல் ரோமர் 3; 17-ம் வசனத்தில் "சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்" என்று எழுதினான். கிறிஸ்துவைத்தவிர சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வேறு வழி இல்லை.

இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளையே, நீங்கள் ஒருவேளை சமாதானத்தை இழந்து சஞ்சலத்தோடு நாட்களைக் கடத்தி வருகிறீர்

களா ? கவலைப்படாதிருங்கள். இயேசுவின் பாதத்தைப் பிடித்து மன்ருடுங்கள். உங்கள் கவலைகளையெல்லாம் அவருக்குச் சொல்லுங்கள். சமாதானத்தைப் பெறுவீர்கள். நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படாமல் உங்கள் விண்ணப்பங்களையெல்லாம் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினுல் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயத்தைக் காத்துக்கொள்ளும். உம்மை உறுதியாய் பற்றிக்கொள்ள மனதாயிருக்கிற படியினுல் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்துவே மனித வாழ்க்கையில் சமாதானத்தை அளிக்கிறவர். கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் ? அவர் சமாதானத்தை இழந்து தவிக்கிற மக்களுக்கு சமாதானத்தை அளிக்கிறவர்.

9
கிறிஸ்து வாழ்க்கையின் கொந்தளிப்பை நீக் அமைதியைக் கட்டளையிடுகிறவர்

வாழ்க்கை ஒரு கடல். வாழ்கையாகிய கடலில் குடும்பமாகிய தோணியில் நாம் பிரயாணம் செய்து வருகிறோம். வாழ்க்கை கடலில் ஆழத்தில் செல்லுகிற போது பற்பல விதமான துன்பங்கள், தொல்லைகள், புயல்போல் நமக்கு விரோதமாக வீசுகிறது. அப்பொழுது நமது வாழ்க்கை கடல் கொந்தளிக்கிறது. குடும்பமாகிய தோணி. அலை அடிக்கப் படுகிறது. ஐயோ! அதமானேம் என்று சொல்லி நாம் கலங்கித் தவிக்கிறேம். அந்த வேளையில் நமது ஆண்டவர் இயேசு கொந்தளிப்பை நீக்கி நமக்கு அமைதியைக் கட்டளையிடுகிறவர். இதையறிந்த தாவீது ராஜா சங். 107:28-30 வரைக்கும் உள்ள வசனங்களில் " அப்பொழுது தங்கள் ஆபத்திலே அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிருர்கள், அவர்கள் இக்கட்டுகளுக்கு அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கிருர். அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிருர்கள் " என்று எழுதினுன். இதை அறிந்த நீதிமானுகிய யோபு, யோபு 26:12 -ம் வசனத்தில் " அவர் தமது வல்லமையினுல் சமுத்திரக் கொந்தளிப்பை அம

ரப்பண்ணித் தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை அடக்குகிறார்'' என்று கூறினான்.

கர்த்தராகிய இயேசு கொந்தளிப்பை அமர்த்துகிறவர், எனவே தான் இயேசு நாதர் இந்த உலகத்தில் ஊழியம் செய்து வந்த நாட்களில்ஒருநாள் இயேசுவும் அவருடைய சீஷரும் கலிலேயா கடலில் பிரயாணம் செய்தார்கள். இயேசு கப்பலின் பின்னணியத்தில் படுத்து நித்திரைச் செய்தார். சீஷர்கள் கப்பலை ஓட்டிச் சென்றார்கள். கப்பல் கடலின் ஆழத்தில் சென்றது. திடீரென புயல்காற்று எழும்பி, கடல் கொந்தளித்து கப்பலு ஆடி அமிந்துபோகிற தருணம் உண்டாயிற்று. சீஷர்கள் தங்களால் இயன்றமட்டும் பிரயாசப்பட்டார்கள். முடிவில் நம்பிக்கை இழந்தது - போதகரே நாங்கள் மடிந்து போகிறோம் உமக்குக் கவலையில்லையா என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். அவர் உடனே எழும்பி காற்றையும் கடலையும் பார்த்து "இரையாதே அமைதியாயிரு'' என்றார். உடனே காற்றும் கடலும்அவர்கட்டளைக்குக் கீழ்ப்படிந்தது, மிகுந்த அமைதியுண்டாயிற்று.

கர்த்தருடைய பிள்ளையே! உங்கள் குடும்ப வாழ்க்கை அமைதியற்றதாய்க் காணப்படுகிறதா? உங்களுக்கு ஏற்பட்ட கொந் தளிப்பு தான் என்ன? புருஷன், மனைவிக்குள் சந்தோஷம் இல்லையா? பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை மதியாமல் மனதும் மாமிசமும் விரும்புகிறபடி தங்களுக்கு இஷ்டமான வழியில் நடக்கிறபடியால் குடும்பத்தில் பற்பலவிதமான தொல்லைகளை அனுபவிக்கிறீர்களா? உற்றார் உறவினர் உங்களுக்கு விரோதமாக தீங்கு செய்கிறார்களா? நன்மை பெற்றவர்கள் உங்கள் கைகளினால் பெற்ற நன்மையை மறந்து உங்களுக்கு விரோதமாக தீமை செய்கிறார்களா? சுற்றிலும் சத்து ருக்கள் சூழ்ந்து கொண்டார்களா? வேலை செய்கிற இடத்தில் காரண மில்லாமல் பகைக்கப்படுகிறீர்களா? ஏன் இதற்காக நீங்கள் கவலைப் படவேண்டும்? நீங்கள் யாராக இருந்தாலும் இயேசுவே எங்களுக்கு இரங்குமென்று அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்கள் கூப் பிடுதலைக் கேட்டு உங்களுக்கு இரங்குவார். ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகி மைப்படுத்துவாய் என்று வாக்களித்திருக்கிறார். கர்த்தர் நல்லவர் இக்

கட்டு நாளில் அரணுன கோட்டை; தம்மை நம்புகிற மக்களை அறிந்தி ருந்திருக்கிருர்; அப்படிப்பட்ட ஆபத்தில் நம்மைத் தப்புவித்தார்; இப் பொழுதும் தப்புவிக்கிருர், இனிமேலும் தப்புவிப்பாரென்று அவரையே நம்பியிருக்கிருேம். நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னுரென்று அறி வேன். நான் அவரிடத்தில் ஒப்புவித்திருக்கிறதை அந்நாள் வரைக்கும் காக்க வல்லவராயிருக்கிருர். ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிட மாட்டார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் நமது வாழ்க்கையின் கொந்தளிப்பை நீக்கி நமக்கு அமைதியைக் கட்டளையிடுகிறவர்.

10

கிறிஸ்து ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறிப்போன மக்களைத் தேடிவந்து தம்மண்டை சேர்க்கிறவர்

ʘ()ʘ()ʘ

ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறிப்போன மக்களை ஆண்ட வர் புறக்கணித்துத் தள்ளுகிறவரல்ல. பின்மாறிப் போகிறவனிடத்தில் என் ஆத்துமா பிரியமாயிராது என்று அவர் சொன்னுலும், அவனை அப் படியே விட்டுவிடுகிறவரல்ல, எப்படியாயினும் அவனை மறுபடியும் தம் மண்டையில் சேர்க்கவே விரும்புகிருர். எனவே தான் நீதிமான் ஏழு தரம் விழுந்தாலும் எழுந்திருப்பான் என்ருர்.

பின்மாறிப்போன மக்களிடத்தில் நமதாண்டவர் இரக்கமிகுந்த வராயிருக்கிறபடியினுல் யோவான் 21:12 -ம் வசனத்தில் "இயேசு அவர்களை நோக்கி வாருங்கள், போஜனம் பண்ணுங்கள்'' என்று அழைத்திருப்பதைக் காண்கிருேம். யாரைப் பார்த்து இயேசு நாதர் இவ்வாறு அழைத்தார் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக நீசச் சிலுவையில் மரித்தார். இயேசு சிலுவையில் அறையுண்டதை எண்ணி அவரு டைய சீஷர்கள் மிகவும் கலக்கமடைந்தார்கள். ஒரு நாள் கிறிஸ் துவின் பிரதான சீஷனுகிய பேதுரு "நான் மீன்பிடிப்பதற்கு போகி

றேன் " என்ருன். இதைக் கேட்ட மற்ற சீஷரும் நாங்களும் வருகிறோம் என்ருர்கள். உடனே கிறிஸ்துவின் சீஷர்கள் மீன் பிடிப்பதற்காகத் திபேரியா கடலில் இறங்கிவிட்டார்கள். கடலின் ஆழத்தில் சென்று இரவு முழுவதும் வலை வீசினர்கள். ஒரு சிறிய மீன்கூட இவர்களுக்கு கிடைக்கவில்லை. சரீரத்தில் மிகவும் களைத்தவர்களாக காணப்பட்டார்கள்.

இந்த சீஷர்கள் மனிதனைப் பிடிப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள். கிறிஸ்துவின் நாமத்திஞல் பிசாசுகளைத் துரத்தவும், வியாதியஸ்தர்களை சுகப்படுத்தவும் அதிகாரம் பெற்றவர்கள். அவர் நாமத்திஞல் வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்தி, பிசாசுகளைத்துரத்தி அற்புதங்களைச் செய்தவர்கள். இந்த சீஷர்கள் தங்கள் பிரதிஷ்டையைக் குலைத்து, அழைப்புக்குமாருக ஜீவியத்தில் பின்மாறி தங்கள் பழைய தொழிலுக்குச் சென்றுவிட்டார்கள். ஆனுல் அருமை நாதர் இயேசுவோ அவர்களைப் புறக்கணித்துத் தள்ளவில்லை. அவருடைய கிருபையின் கண்கள் அவர்களை நோக்கிப் பார்த்து பின் மாறிப்போன தனது சீஷர்களுக்காக அவர் பரிதாபப்பட்டார். இரக்கம் நிறைந்த இறைவன் பாதங்கள் அந்த திபேரியாக் கடலுக்கு நேராக விரைந்து சென்றது. அதிகாலையில் இயேசு நாதர் திபேரியாக்கடலின் ஓரத்தில் நின்ருர். கடலின் ஆழத்தில் களைத்தவர்களாய்க் காணப்பட்ட தமது சீஷர்களைப் பார்த்து, "பிள்ளைகளே! புசிப்பதற்கு ஏதாவது உங்களிடத்தில் உண்டா" என்று கேட்டார். ஒன்றும் இல்லை யென்ருர்கள். உங்கள் படவுக்கு வலது பக்கமாக வலையைப் போடுங்கள் என்ருர். அப்படியே வலையை வீசினர்கள். வலையை இழுக்க முடியாத அளவுக்குத் திரளான மீன்கள் அகப்பட்டது. அப்பொழுது இயேசுவின் சீஷர் அவரை அறிந்து கொண்டார்கள். அன்பு நிறைந்த ஆண்டவர் பின்மாறிப் போன அவர்களைக் கடிந்து கொள்ளாமல் வாருங்கள் போஜனம் பண்ணுங்கள் என்று பட்சமாக அழைத்து அவர்களுக்கு அப்பத்தையும் மீனையும் புசிக்கக் கொடுத்து அவர்களைத் தேற்றி, மீன்பிடிக்கப் போகிறேன் என்று கடலுக்குச் சென்று விட்ட பிரதான சீஷனுகிய பேதுருவைப் பார்த்து, "யோனுவின் குமாரனுகிய சீமோனே" நீ என்னை

நேசிக்கிறாயா'' வென்று அன்போடு கேட்டு ''என் ஆடுகளை மேய்ப்பாயாக'' என்று கட்டளையிட்டு அவனைக் கொண்டு மகத்துவமான கிரியைகளை நிறைவேற்றி, ஆயிரம், ஆயிரம் மக்களைத் தமது மந்தையில் சேர்த்தார்.

கர்த்தருடைய பிள்ளையே! கிறிஸ்து இயேசு பின் மாறிப்போன மக்களை ஒரு போதும் புறக்கணித்துத் தள்ள விரும்பாமல் தம்மண்டையில் சேர்க்கவே விரும்புகிறார். இவைகளை உங்களுக்கு எழுதுகிற பாதகனாகிய நான் என்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்ப நாட்களில் ஒருமுறை பின்மாறிப் போனேன். நாய் தான் கக்கினதைத் திரும்பத் தின்னுவதைப் போலவும், கழுவப்பட்ட பன்றி திரும்பச் சேற்றிலே விழுவதைப் போலவும் நான்விட்டு விலகின பாவங்களை மறுபடியும் செய்து ஆண்டவருக்கு ஆகாதவனாக ஜீவித்தேன். அந்த நாட்களில் நான் காட்டாத்துறை உயர் நிலைப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியனாக வேலை பார்த்து வந்தேன். அப்போது என் உடன் வேலைபார்த்த செல்லத் தம்பி என்று சொல்லுகிற ஒரு அருமையான சகோதரன் என்னிடத்தில் அடிக்கடி என்னுடைய முந்தின ஆவிக்குரிய ஜீவியத்தின் மேன்மையான காரியங்களை ஞாபகப் படுத்தி எப்படியாவது நான் என் பின்மாற்றத்தை விட்டுத் திரும்ப வேண்டுமென பேசிவந்தார். நான் அவருடைய ஆலோசனையை அசட்டை செய்து வந்தேன். ஒரு நாள் இரவு அவர் என்னைத் தனியாகச்சிலராகக்கூடி ஜெபிப்பதற்காக ஒரு பாறைக்கு விரும்பி அழைத்தார். நான் வரமுடியாது என்று கூறியபோது, ஜெபிக்க மனமில்லாவிட்டாலும் எங்களுக்கு துணைக்காகவது வாருங்களென்று வற்புறுத்தி அழைத்துச் சென்றார். நான் வேண்டா வெறுப்புடன் சென்றேன். அவர்கள் சிலராக ஒரு இடத்தில் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நான் சற்று தூரத்திற்கப்பாலிருந்து அதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். இந்த வேளையில் திபேரியாக் கடலோரத்தில் பின்மாறிப் போனத் தமது சீஷரைத் தேடிச் சென்ற இறைவன் இயேசுவின் பாதம் நாயினும் கேடு கெட்ட துரோகியாகிய என்னைத் தேடிவந்தது. கிருபை நிறைந்த ஆண்டவர் என்னை சமீபித்து வந்து என் பின்மாற்றத்தை உணர்த்தினார். நான் உள்ளம் நொந்து என் குறைகளை கண்ணீரோடு அறிக்கை செய்து அவர்களோடு சேர்ந்து ஜெபித்து

என்னை மறுபடியும் அவருக்கு அற்பணித்தேன். கர்த்தர் திரும்பவும் என்னைத் தமது ஆவியால் நிறைத்து கிருபையினால் முடிசூட்டினார். ஒரு சில மாதங்களுக்குள்ளாக என்னைத் தமது ஊழியத்திற்காக அழைத்தார். இன்று நான் என்னை முற்றுமாக அவருக்கு அர்ப்பணித்து அவருக்கு ஊழியம் செய்து வருகிறேன்.

பிரியமான தேவனுடைய பிள்ளையே! இதை வாசிக்கிற நீங்கள் ஒரு வேளை உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாறி காணப் படுகிறீர்களா? திபேரியா கடற்கரைக்கு தமது சீஷரைத் தேடிச்சென்ற இயேசுவின் பாதம் இப்போது உங்களைத் தேடிவந்து உங்கள் சமீபத்தில் நிற்கிறது முன்னே உற்சாகமாக ஆலயத்திற்குச் சென்று நன்றாக பாடின, ஜெபித்த, உற்சாகமாக காரியங்களைச் செய்த, ஊரும் ஆரோனும் மோசேயின் கரங்களைத் தாங்கினது போல தேவனுடைய ஊழியக்காரர்களின் கரங்களைத் தாங்கின, தேவனுக்கு பிரியமான பரிசுத்த ஜீவியம் செய்த மக்களோடு நெருங்கி பழகி வந்த, அதிகமாக வேதம்வாசித்து, கர்த்தருடைய ஊழியத்திற்கென்று உற்சாகமாய் கொடுத்து எப்பொழுதும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருந்த நீங்கள் இப்பொழுது ஆலய ஆராதனைகளைப் புறக்கணித்து, தேவனுடைய ஊழியக்காரர்களைப் பகைத்து, பரிசுத்தவான்களோடுள்ள ஐக்கியத்தை விட்டு, வேதம் வாசிப்பதை, ஜெபிப்பதைக் குறித்து வாஞ்சையில்லாதவர்களாக, கர்த்தருக்கென்று கொடுத்து வந்ததையெல்லாம் நிறுத்தி, விட்டு விலகின ஆகாத சிநேகிதரோடு ஐக்கியம் வைத்து, பழைய பாவ ஜீவியத்திற்கு அடிமையாகி நித்தமும் சஞ்சலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களே காரணம் என்ன ? தேவனுடைய ஆசீர்வாதங்களை இழந்து இன்று வாழ்க்கையில் அநேக வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஐயோ ! என் பின்மாற்றத்தினிமித்தம் ஆண்டவர் என்னை கைவிட்டுவிட்டார். இத்தனை துன்பங்களுக்கும் காரணம் என் பின்மாற்றமே என்று உணர்ந்து கண்ணீரோடு நாட்களைக் கடத்தி வருகிறீர்கள் இனி என்னை ஆண்டவர் நேசிப்பாராவென்று கலங்கித் தவிக்கிறீர்கள. கர்த்தருடைய பிள்ளையே ! இயேசு உங்களை நேசிக்கிறார். அவருடைய திருப்பாதம் பின்மாறிப்போன உங்களை நோக்கி இப்பொழுது விரைந்து வருகிறது. என் மகனே ! மகளே ! நான் உன்னை நேசிக்கிறேன்·

உன் பின்மாற்றத்தை விட்டு இன்றைக்காவது என்னண்டைக்குத் திரும்பு என்று கனிவோடு அழைக்கிறார். ஏன் தேவனுடைய பிள்ளையே! உங்கள் பின்மாற்றத்தை விட்டு அவரிடம் திரும்பக் கூடாது. ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் கிரியை செய்யும் இந்நேரமே உங்கள் முழங்கால்களை அவருக்கு முன்பாக முடக்குங்கள். கர்த்தருடைய பாதத்தில் கண்ணீரோடு உங்கள் பின்மாற்றத்தையும், குற்றம் குறைகளையும் அறிக்கை செய்யுங்கள். அவர் உங்களை மன்னித்து உங்கள் குற்றங்களை மறந்து தமக்குப் பிரியமான சாட்சியாக மாற்றுவார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் பின்மாறிப்போன மக்களைத் தேடி வந்து மறுபடியும் தம்மண்டை சேர்க்கிறவர்.

11

கிறிஸ்து உங்களுக்காகவும் எனக்காகவும் கைகள் கட்டப்பட்டு கன்னத்தில் அறைபட்டவர்

கர்த்தருடைய பிள்ளையே!

அந்தோ! சர்வலோகாதிபதியாகிய இயேசுகிறிஸ்து கைகள் கட்டப்பட்டவராக அநீதிமானாகிய பிலாத்துவுக்கு முன்னால் நிற்கிறாரே காரணம் என்ன? மத். 27:2 -ம் வசனத்தில் " அவரைக் கட்டிக் கொண்டு போய் தேசாதிபதியாகிய பொந்தி பிலாத்துவினிடத்தில் ஒப்புக் கொடுத்தார்கள் " என்று எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அருமைநாதர் இயேசுகிறிஸ்து தமது கைகள் மூலம் யாருக்கும் எவ்விதமான தீமைகளையும் செய்ததேயில்லை. அவர் தமது கையை நீட்டி சிறு குழந்தைகளைக் கரத்தில் ஏந்தி அவர்களை ஆசீர்வதித்தார். அவர் தமது கையை நீட்டி ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கரத்தில் வாங்கி அதை ஆசீர்வதித்து, ஆயிரம் ஆயிரமான மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். அவர் தமது கையை நீட்டிக் குருடனைத் தொட்

டார். அவன் பார்வையடைந்தான். செவிடனைத் தொட்டார்; அவன் கேட்டான். ஊமையனைத் தொட்டார்; அவன் பேசினுன். மரித்தவர் களைத் தொட்டார்; அவர்கள் ஜீவனோடே எழும்பினார்கள்.

அவர் தமது கைகளினால் களவு செய்யவில்லை, தமது கையினால் கள்ளக்கணக்கு எழுதவில்லை, கைக்கூலி வாங்கவில்லை, கள்ளக் கடிதம் எழுதவில்லை, பிறனுக்கு விரோதமாக மொட்டைக் கடிதம் எழுதவில்லை, கலப்படம் செய்யவில்லை, கள்ள அளவு அளக்கவில்லை, கொள்ளை லாபம் அடிக்கவில்லை, இரவோடு இரவாக அடுத்தவன் எல்லைக் கல்லை பிடுங்கி ஆஸ்தியை அபகரித்து எடுக்கவில்லை, அநியாயமாக பணத்தை வட்டி வாங்கி ஏழை எளியோரை வாட்டிப் பிழைக்கவுமில்லை, அப்படியானால் பாதகர்கள் ஏன் ஆண்டவர் இயேசுவின் அன்புக் கரங்களைக் கட்ட வேண்டும்? கர்த்தருடைய பிள்ளையே! நீங்களும் நானும் நமது கைகள் மூலம் செய்த பாதகங்களுக்காக நம் கைகள் கட்டப்படுவதற்குப் பதிலாக அவர் கைகள் கட்டப்பட்டார்.

இதைப் படிக்கிற அன்பான தேவனுடைய பிள்ளையே! நாம் நமது கைகள் மூலமாக செய்த ஒவ்வொரு அசுத்த கிரியைகளுக்காக நமது கைகள் கட்டப்படுவதற்குப் பதிலாக இயேசு நாதரின் கைகளைப் பாதகர்கள் கட்டினார்கள். வாலிபனே! கன்னிகையே! நீங்கள் எழுதின அருவருப்பான கடிதங்கள் தான் இயேசு நாதரின் கைகள் கட்டப்படுவதற்கு காரணமாயிற்று. அலுவலகத்தில் வேலை பார்க்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்கள் எழுதின கள்ளக்கணக்குகள் தான், கள்ள கையெழுத்துக்கள் தான், வாங்கின கைக்கூலிகள் தான், பிறனுக்கு விரோதமாக எழுதின மொட்டைக் கடிதங்கள் தான் என் ஆண்டவரின் கைகள் கட்டப்படுவதற்கு காரணமாயிற்று. வியாபாரம் செய்கிற என தருமைச் சகோதரனே, நீங்கள் அளந்த கள்ள அளவுகள் தான், நீங்கள் அடித்த கொள்ளை லாபம் தான், அரசாங்கத்தையும் சமுதாயத்தை வஞ்சித்து கறுப்புச் சந்தையில் பணம் சம்பாதித்தீர்களே, இந்த பாவம் தான் நமதாண்டவர் கைகள் கட்டப்படுவதற்கு காரணமாயிற்று. விவசாயம் செய்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்கள் தானியத்தில் கலப்படம் செய்தீர்களோ - தானியத்தை விற்கிறவனின் தலையில் ஆசீர்வாதம் தங்கும் என்பதை மறந்து, தேசத்து மக்

கள் பஞ்சத்தால் வாடி வேதனைப் படும்போது, அதிக லாபம் பெற வேண்டுமென நாட்டை வஞ்சித்து தானியத்தை விளை பொருள்களை பதுக்கி வைத்தீர்களே. இதற்காகத்தான் நமதாண்டவர் கைகள் கட்டப்பட்டார். பள்ளிக்கூடத்தில் வேலை செய்கிற ஆசிரிய, ஆசிரியை களே! கை நிறைய சம்பளம் வாங்கினாலும் உங்களிடம் படிக்கிற பிள்ளை களின் பிற்கால வாழ்வைக் குறித்து கொஞ்சமேனும் சிந்தியாமல் பணம் சம்பாதிப்பதற்காக பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடத்தில் நன்றாகக் கற்பிப்பதற்கு பதிலாக ஏதோ தானோவென்று கடமையைச் செய்து, டியூஷன் மூலம் பணம் சம்பாதித்துப் பிள்ளைகளின் வாழ்வை பாழாக்குகி றீர்களே, இதற்காகவே கர்த்தர் உங்களுக்காக கைகள் கட்டப்பட்டார். மாணவ கண்மணிகளே - தன் கடமையில் ஜாக்கிரதையுள்ள வனைக் கண்டாயானால் அவன் நீசருக்கு முன்பாக நிற்காமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான் என்ற வசனத்தையும் மறந்து பரீட்சைகளில் காப்பி அடிக்கிறீர்களே, இதற்காகத்தான் இயேசுநாதர் கைகள் கட்டப்பட்டவராக நின்றார். தேவனுடைய பிள்ளையே! இந்தக் கோரக் காட்சி உங்கள் உள்ளத்தை நொறுக்காதா?

அந்தோ! கைகள் கட்டப்பட்டவராக நிற்கும் அருமைநாதர் இயேசுவின் கன்னத்தில் பொல்லாத போர்சேவகன் ஓங்கி அறைகிறான. வேலைக்காரரும் என் நேசரின் கன்னத்தில் தங்கள் முரட்டுக்கரங்களால் ஓங்கி அறைகிறார்களே - கர்த்தருடைய பிள்ளையே, மனக்கண்களால் கட்டப்பட்ட அருமைநாதர் இயேசுவின் முகத்தைப் பாருங்கள். அந்த கன்னங்கள் வீங்கி பார்ப்பதற்கு அருவருப்பாக காட்சி அளிக்கிறதே. இரக்கமற்ற பாதகர்கள் என் நேசரின் அன்பு முகத்தில் துப்புகிறார்கள் கல்நெஞ்சம் படைத்த பாதகர்கள் அவர் கண்களைக்கட்டி, தலையிலே குட்டி, இயேசுவே உன்னை அடித்தவன் யார்? ஞானதிருஷ்டியினால் அதை எங்களுக்குச் சொல்லு என்று பரிகசிக்கிறார்கள். மா பாதகர்கள் பொன்முடி சூட்டவேண்டிய என் நேசரின் தலையில் முள்முடியைச் சூட்டி ஓங்கி அறைகிறார்களே - தலையிலிருந்து இரத்தமானது பாய்ந்துக் கொண்டிருக்கிறதே - இரக்கமற்ற நீசர்கள் அவருடைய தாடி ரோமங்களைப் பிடுங்குகிறார்கள் - என் நாதா இத்தனைப் பாடுகளும் உமக்கு ஏன்? பாதகன் நான் செய்த பாதகம் அல்லவா? கர்த்தருடைய பிள்ளையே! நமது கண்கள் மூலமாக பார்த்த ஆகாத பார்வைகள்,

நமது காதுகள் மூலம் கேட்ட ஆகாத காரியங்கள், நாவினுல் பேசிய தகாத வார்த்தைகள், மூளையினுல் சிந்தித்த வீணான சிந்தனைகள் தான் இத்தனைப் பாடுகளுக்கும் காரணமாயிற்று.

மகாத்மா காந்தியடிகள் கூட போற்றிப் புகழ்ந்த மலைப்பிரசங்கத்தின் ஒரு பகுதியில் "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு இடது கன்னத்தையும் திருப்பிக்கொடு" (மத்தேயு 5.39) என்று இயேசு கூறியிருப்பதைக் காண்கிறோம். போதித்தது மட்டுமல்ல அதை என் நேசர் சாதனையில் நிறைவேற்றினர். இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளையே! ஏழை எளியோரை, ஆதரவற்றவர்களை, திக்கற்ற பிள்ளைகளை, விதவைகளை அடித்து நீங்கள் துன்புறுத்தவில்லையா? நாம் இவ்வாறு செய்த பாதகங்களுக்காக குற்றமில்லாத நேசர் கைகள் கட்டப்பட்டு, கன்னத்தில் அறையப்பட்டார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் உங்களுக்காக எனக்காக பிலாத்துவுக்கு முன் கைகள் கட்டப்பட்டவராக நின்றவர். கன்னத்தில் அறைபட்டவர்.

12

கிறிஸ்து நமக்காக அழகற்றுத் தொங்கியவர்

பிரியமான தேவனுடைய பிள்ளையே! இப்பொழுது உங்கள் மனக்கண்களைச் சற்று நேரம் கொல்கதா மேட்டிற்கு நேராகத் திருப்புமாறு பணிவாய் வேண்டிக் கொள்கிறேன். இதோ கொல்கதா மேட்டிலே மூன்று சிலுவைகள். அந்த மூன்று ,சிலுவைகளில் நடுச் சிலுவையில் முப்பத்தி மூன்றரை வயது பிராயமுடையவராக ஒருவர் தொங்குகிறார். அவரைக்குறித்து தான் தீர்க்கத்தரிசியாகிய ஏசாயா தனது தீர்க்கத்தரிசன புத்தகம் 53: 2ம் வசனத்தில் "அவருக்கு அழகுமில்லை, சௌந்தரிய முமில்லை, அவரைப் பார்க்கும் போது நாம் அவரை விரும்பத் தக்கரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" என்று

குறிப்பிடுகிருன்.. அவர் எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டவராக, துக்கம் நிறைந்தவராக பாடு அனுபவித்தவராக காணப்பட்டார். திரளான கூட்டத்தின் மத்தியில் பெண்களும் நிற்கின்ருர்கள் கல்நெஞ்சுபடைத்த பாதகர்கள் கொஞ்ச மேனும் இரக்கமற்று அந்த முப்பத்திமூன்றரை வயது பிராயமுடைய நேசருடைய வஸ்திரங்களை உரிந்து விட்டார்கள். ஐயோ! என் நேசர் இயேசு அவரை நிர்வாணியாய் தொங்குகிருர். கர்த்தருடைய பிள்ளையே! அவர் எத்தனை அவமானங்களை நமக்காகச் சகிக்கிருர்? மனுக்குலத்தை மீட்பதற்காக அழகற்று தொங்கும் இந்த நேசர் எப்படிப்பட்டவர்?

மேன்மை தங்கிய இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலமோன் நமதாண்டவர் இயேசுவைக் குறித்து உன்னதப்பாட்டின் புத்தகத்தில் "அவர் சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலிபுஷ்பம்" (உன் 2:1) "வெண்மையும் சிவப்புமானவர், பதினயிரம் பேர்களில் சிறந்தவர், அவர் தலை தங்கமயமாக இருக்கிறது. அவர் தலைமயிர் சுருள் சுருளாயும், காகத்தைப் போல் கருமையாயுமிருக்கிறது. அவர் ரூபம் லீபனேனைப் போலவும், கேதுருக்களைப் போலவும் சிறப்பாயிருக்கிறது அவர் முற்றிலும் அழகுள்ளவர்" (உன் 5:10, 11, 16) என்று குறிப்பிடுகிருன். ஒரு பாரம்பரிய சரித்திம் இயேசு நாதரைக் குறித்து, அவர் இந்த உலகத்தில் பலஸ்தீனவில் வாழ்ந்து வந்த காலத்தில் அன்று வாழ்ந்து வந்த அத்தனை புருஷரிலும் அழகு மிகுந்தவராகக் காணப்பட்டார் என்று கூறுகிறது. இவ்வாறு முற்றிலும் அழகுள்ள நேசர் அழகற்றுத் தொங்குகிருரே - அவரைப் பார்க்கும் நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருக்கிறதே - அவர் பார்ப்பதற்கு அந்தக் கேடுற்றவராகக் காணப்படுகிருரே - காரணம் என்ன? தேவனுடைய பிள்ளையே! அது தான் உங்கள் மீதும் என் மீதும் அவர் வைத்திருக்கிற அன்பு.

உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து மீட்டு இரட்சிப்பதற்காக அல்லவா முற்றிலும் அழகுள்ள நேசர் அழகற்றவராகத் தொங்குகிருர். ஐயோ! பாவம் எவ்வளவு கொடுமையானது? கர்த்தருடைய பிள்ளையே! இப்பொழுதாவது நமது பாவம் எவ்வளவு கொடுமையானதென்று சிந்திக்க மாட்டீர்களா?

என் நேசரே - பாதகனுகிய நான் செய்த பாவத்தின் கொடுமையினுல் அல்லவா நீர் நீச சிலுவையில் அழகற்றுத் தொங்குகிறீர் ? பாவத்தினுல் உம்மைவிட்டுத்தூரம் போய், மனதும் மாமிசமும் விரும்புகிறபடி நடந்து, சாபத்துக் குள்ளாகி, வியாதிப்பட்டு, பெலவீனப்பட்டு நித்திய மரணத்திற்கு நேராக விரைந்து சென்று கொண்டிருக்கும் நீச துரோகியாகிய என்னை மீட்பதற்காக என் நேசரே முப்பத்தி மூன்றரை வயதுடைய வாலிபனுகிய - முற்றிலும் அழகுள்ள நீர் - அழகற்றுத் தொங்குகிறீரே - பொல்லாதவர்கள் என் நாதா - கொஞ்சமேனும் இரக்கமற்றவர்களாக இளைனுக இருந்த உமது வஸ்த்திரத்தை, திரளாக கூடியிருந்த 'மக்கள் மத்தியில், பெண்களும் நிற்கிருர்களென்று கொஞ்சமேனும் உணராமல், உரிந்து உம்மை அரை நிர்வாணியாக நீச சிலுவையில் தொங்க வைத்திருக்கிருர்களே ! உம்மை பார்க்கும் போது - விரும்பக்கூடிய ரூபம் உம்மில் இல்லாமல் போயிற்றே - இத்தனைக்கும் காரணம் என்பாவமல்லவா? நேசரே! இப்பொழுது என் பாவத்தின் கொடுமையை நான் உணருகிறேன். இந்நேரமே சிலுவையின் அடிவாரத்தில் கண்ணீரோடு என் பாவங்களை அறிக்கையிடுகிறேன், இன்று முதல் பாவத்தை வெறுத்துத் தள்ளி உமக்கு சாட்சியாய் ஜீவிப்பேன் என்று ஒரு தீர்மானம் செய்யமாட்டீர்களா? கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ? அவர் உங்களுக்காக அழகற்று சிறுவையில் தொங்கினவர்.

13

கிறிஸ்து நமக்காக தாகத்தால் நா வறண்டு கதறியவர்

O()O()O

என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் தாகமடையான். என்னிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் ஒருக்காலும் பசியடையான் என்ற நமதாண்டவர் சிலுவையில் நமக்காக தாகதத்தினுல் நா வறண்டு கதறினுர். யோவன் 19:28ம் வசனத்தின் எனவே இயேசு "தாகமாயிருக்கிறேன்" என்று கூறியிருப்பதைக் காண்கிருேம். கிறிஸ்து சிலு

வையில் தாகமாயிருக்கிறேன். என்று கூறியிருப்பதைக் குறித்து சிலர் இயேசுவுக்கு சிலுவையில் ஏற்பட்ட தாகம் சரீர தாகமல்ல, அது ஆத்துமதாகம் அவர் தேவனுயிற்றே அவருக்கு எப்படி தாகமுண்டாகு மென்று கூறுவதுண்டு. இதை சரியென்று ஒருபோதும் நான் ஏற்றுக் கொள்ளவேமாட்டேன். ஆத்துமாக்கள் மீது கொண்ட தாகத்தினிமித்தம் அவர் பரலோகத்தைவிட்டு இந்தபூமிக்கு வந்து தன்னைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தாலும் அவருக்கு சிலுவையில் ஏற்பட்ட தாகம் சரீரதாகமே.

வியாழன் இரவு இயேசு நாதர் கெத்சமெனே தோட்டத்தில் இரத்த வியர்வை சிந்தினர். இதைக்குறித்து லாங்கினஸ் என்று சொல்லப்படும் நூற்றுக்கதிபதி “ உங்களுக்கு கவலையில்லையா ” என்று எழுதியிருக்கிற புத்தகத்தில் கெத்சமனேயில் இயேசு நமக்காக வியாகுலப்படுகிற வேளையில் உலகத்தின் பாவத்தை தன்மீது சுமந்து கொண்டதாகவும் எனவே வியாகுலத்தின் மிகுதியால் அவரது இரத்த நாளங்களெல்லாம் உடைந்து இரத்தமானது உரோம துவாரங்கள் வழியாக வியர்வையைப் போல் வந்தது. என்று குறிப்பிடுகிருன். அந்த இராத்திரியில் அவர் அனுபவித்த பாடுகள் ஏராளம் ஏராளமானவை. அவரை நியாயந் தீர்ப்பதற்கென்று பாதகர்கள் அங்கும் இங்குமாக அலைத்தார்கள். இரவு முழுவதும் கைகள் கட்டப்பட்டவராக அவர் பொல்லாதவர்களால் இம்சிக்கப்பட்டார். அநிதிமானுகிய பிலாத்து ஜனங்களை திருப்த்திப்படுத்துவதற்காக அவரைக் குற்றமில்லாதவர் என்று அறிந்திருந்தும் வாரினுல் அடிக்கக் கட்டளையிட்டான். கல்நெஞ்சம் படைத்தவர்கள் அவருடைய முதுகை வாரினுல் அடித்து கிழித்தார்கள். உழுகிறவன் வயல் நிலத்தை உழுவது போல அவர்முதுகானது கிழிக்கப்பட்டது. பின்பு கோரச்சிலுவையை அவர்மீது சுமத்தி அவரை அழைத்துச் சென்ருர்கள். சிலுவையை சுமக்க இயலாமல் அருமை நாதர் தள்ளாடி தள்ளாடி விழுந்தார். அவர் பாரச்சிலுவையை சுமக்க இயலாமல் கீழே விழுந்தபோதெல்லாம் துரோகிகள் அவரை அடித்து துன்புறுத்தினர்கள். பின்பு இறந்து விடக்கூடாதென்பதற்காக சிரேனே ஊர் சீமோனுடைய தோளில் சிலுவையை ஏற்றி கொல்கதா மேட்டில் அவரை 3 ஆணிகளால் சிலுவையில் அறைந்து தூக்கினர்கள். அந்த கொடிய உஷ்ணத்

தில்சகலவற்றையும் சிருஷ்டித்த சிருஷ்டிகர்த்தா. சர்வலோக மக்களின் மீட்பிற்காக வானத்திற்கும் பூமிக்கும் நடுவாக தொங்கினர். இத்தனைப் பாடுகளை அவர் அனுபவித்தும் அவர் மீது இரக்கப்பட்டு ஒருவராவது ஒருசொட்டுத் தண்ணீரையாவது அவருக்குக் கொடுக்கவில்லை. அப்படியானல் அவர் தாகம் எத்தனைக்கு கொடியதாக இருந்திருக்கும் என்பதை கர்த்தருடைய பிள்ளையே நீங்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வனாந்திரத்தில் தமது ஜனத்தாராகிய இஸ்ரவேலருக்கு கண்மலையைப் பிளந்து தண்ணீரைக் கொடுத்தவர். மாராவின் கசந்ததண்ணீரைத் தித்திப்பாக மாற்றினவர். ஆபிரகாமின் அடிமைப் பெண்ணாகிய ஆகார் வனாந்திரத்தில் தண்ணீருக்காக அங்கலாய்த்தபோது அவளுடைய கண்ணீரைப் பார்த்து இரங்கி நீருற்றைக் காண்பித்தார். மணமற்ற, நிறமற்ற, ருசியற்ற தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றியவர், சூரச்செடியின் கீழ் வாழ்க்கையில் வெறுப்படைந்து கிடந்த தமது தாசனாகிய எலியாவிற்கு பரலோகத்தின் தூதனை அனுப்பி அப்பத்தையும், தண்ணீரையும் கொடுத்தார். மத்தியானத்தின் வெயிலையும் பொருட்படுத்தாது சமாரியாவின் தூரவண்டைக்குச் சென்று பாவியான ஸ்திரீயைச் சந்தித்து தாகத்திற்குத் தா என்று கேட்டு என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்று கூறி அவள் ஆத்துமத் தாகத்தைத் தீர்த்த தேவாதி தேவன்; இதோ சிலுவையில் தொங்கி தாகத்தினல் நாவறண்டு " தாகமாயிருக்கிறேன் " என்று கதறுகிருர்.

கர்த்தருடைய பிள்ளையே! நமது பாவத்திற்காக இயேசு கதறிச் சொல்லும், இந்த வார்த்தைகள் உங்கள் இருதயத்தை நொறுக்கவில்லையா ? அன்று சிலுவையில் நமக்காக இத்தனை வியாகுலங்களை சகித்து தாகத்தினல் நாவறண்டு கதறிய ஆண்டவர் இன்று உங்கள் ஆத்துமா மீது தாகமுடையவராயிருக்கிருர். நம்மில் ஒருவனுவது கெட்டுப்போவது அவருக்குப் பிரியமான காரியமல்ல துன்மார்க்கன் தன் பாவத்தில் கெட்டழிந்து போவதை விரும்பாமல் அவன் பிழைத்திருப்பதையே விரும்புகிறேன் என்ற ஆண்டவர்; ஒருவேளை இந்தப் புத்தகத்தைப் படிக்கிற நீங்கள் இன்றும் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தால் கர்த்தருடைய பிள்ளையே, இறை

வன் இயேசு உங்கள் ஆத்துமா மீது தாகமுடையவராக இருக்கிறார். இதுவரைக்கும் அவரது அன்பைக் குறித்து கொஞ்சமேனும் சிந்தியாமல் உங்கள் நாட்களைக் கடத்தி இருந்தால் இன்றைக்காவது உங்கள் பாவத்தை வெறுத்துத் தள்ளி உங்களை அவருக்கு ஒப்புக்கொடுக்க மாட்டீர்களா ? கிறிஸ்து உங்களுக்காகத் தாகத்தினால் நாவறண்டு கதறியவர்.

14

கிறிஸ்து உங்களுக்காக எனக்காக ஜீவனை இழந்து பிரேதமாகத் தொங்கியவர்

நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்கிறான் என்று இயேசு கூறினார். கூறினது மட்டுமல்ல ஆடுகளின் மேய்ப்பனாகிய இயேசு நாதர் தமது ஆடுகளாகிய மனுமக்களுக்காக தமது ஜீவனையே சிலுவையில் விட்டார். எனவே அப். 8:33 -ம் வசனத்தில் " அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று " என்று எழுதியிருப்பதைக் காண்கிறோம்.

. . பிரியமான தேவனுடைய பிள்ளையே ! இப்பொழுது உங்கள் மனக்கண்களைக் கிறிஸ்துவின் சிலுவைக்கு நேராகத் திருப்புங்கள். அந்தோ நமது அருமை இரட்சகர் ஜீவனை இழந்து பிரேதமாகத் தொங்குகிறார். ஜீவாதிபதியாகிய இயேசு ஏன் ஜீவனை இழந்து பிரேதமாகத் தொங்க வேண்டும் ? பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்று தலையைச் சாய்த்து ஜீவனை விட்டாரே எதற்காக ?

கர்த்தருடைய பிள்ளையே ! நாயினூர் கிராமத்திற்கு ஒரு முறை இயேசுநாதர் சென்றபோது வாலிபன் ஒருவனைப் பாடையில்

சுமந்து கொண்டு வருகிற காட்சியைக் கண்டார். இறந்துபோன அந்த வாலிபனுடைய விதவையான தாய் தன் மகனுக்காகக் கதறி அழுகிற காட்சியைக் கண்ட இயேசு அந்தபாடை தன்னை சமீபிக்கிற வரைக்கும் பொறுமையாக நின்று; பாடை தன்னை சமீபித்த போது அந்த ஸ்திரீயை நோக்கி அழாதே என்று கூறி, பாடையைத் தொட்டு வாலிபனே எழுந்திரு என்றார். உடனே வாலிபன் எழுந்திருந்தான். அவனை அவனுடைய தாயோடு அனுப்பி அவள் கண்ணீரைத் துடைத்தார். யவீரு தனக்கருமையான பெண் குழந்தையை மரணத்தினால் இழந்து தவித்த வேளையில் அவனைத் தேற்றி, அவன் வீட்டிற்குச் சென்று இறந்து போன குழந்தையின் கரத்தைப் பிடித்து சிறு பெண்ணே எழுந்திரு என்றார். உடனே இறந்து போன சிறுபெண் ஜீவனோடு எழும்பினாள். அந்த தகப்பனின் துயரத்தைப் போக்கினார். பெத்தானியா கிராமத்திலே மார்த்தாள், மரியாள் என்கிற இரண்டு சகோதரிமார் இயேசுவைக் கண்ட மாத்திரத்தில் இறந்து போன தங்கள் சகோதரனுக்காக அழுகிற காட்சியைக் கண்டதும் உள்ளம் உருகி அழுதது மட்டுமல்ல; இறந்து போன லாசருவை எங்கே வைத்தீர்களென்று கேட்டு; அவன் கல்லறையின் அருகில் நின்று, இறந்து நாலு நாளான லாசருவை நோக்கி லாசருவே வெளியே வா என்று சொன்ன மாத்திரத்தில் இறந்துபோன லாசரு வெளியே வந்தான். இவ்விதமாக மரித்தவர்களுக்கு ஜீவனை அளித்த, செத்து நாறிப்போன சரீரத்தைஉயிரோடு எழுப்பின வல்லமை நிறைந்த தேவாதி தேவன் வானத்திற்கும் பூமிக்கும் நடுவாக கோரச் சிலுவையில் மூன்று ஆணிகளால் அறையப்பட்டு பிரேதமாக தொங்குகிறாரே காரணமென்ன ?

பிரியமான தேவனுடைய பிள்ளையே! பாவத்தினிமித்தமாக தேவனை விட்டுத் தூரம்போய் சாபத்திற்குள்ளாகி, வியாதிப்பட்டு, நித்திய மரணத்திற்கு நேராக விரைந்து சென்ற மனுக்குலத்திற்கு நித்திய ஜீவனை அளிப்பதற்காக தேவாதி தேவன் பிரேதமாகத் தொங்குகிறார் இதைப்படிக்கிற அன்பான கர்த்தருடைய பிள்ளையே! உங்களுக்கு ஜீவனை அளிப்பதற்காக ஜீவாதிபதி ஜீவனை விட்டார். அவர் நம் ஒவ்வொருவருக்காக மரணத்தை ருசி பார்த்தார். (எபி. 2.9) எனவே நம்மில் ஒருவராவது கெட்டுப்போவது தேவனுக்குப் பிரியமானதல்ல அவர் சர்வலோகத்தின் மக்களுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தபடி.

யினால் மனுக்குலம் முழுவதையும் நேசிக்கிறார். கிறிஸ்தவ மக்களுக்காக மாத்திரமல்ல, சகல மக்களுக்காகவும் அவர் மரணத்தை ருசி பார்த்தார். ஆகவே இதைப்படிக்கிற அன்பான தேவனுடைய பிள்ளையே! ஒருவேளை நீங்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்களாயில்லாமலிருந்தாலும் உங்களை ஆண்டவர் நேசிக்கிறார். ஏனெனில் அவரே மனுக்குலத்தை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தர். அவர் சகல மதத்தவற்கும் சொந்தமானவர். அவர் உங்களுக்காகவும் மரணத்தை ருசி பார்த்தபடியினால் உங்கள் ஆத்துமா அவர் பார்வையில் விலையேறப்பட்டது. ஆகவே இன்றைக்காவது என் மகன், என் மகள் பாவத்தை வெறுத்துத் தள்ளி அதை விட்டுவிட்டு என்னை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனுக்கு சுதந்திரவாளியாக மாட்டானா என்று அன்போடு பார்க்கிறார். கர்த்தருடைய பிள்ளையே! இப்பொழுது அவர் கண்கள் உங்களையே நோக்கிப் பார்க்கிறது. ஏன் இந்த வேளையில் உங்கள் பாவத்தை அவர் சமூகத்தில் அறிக்கைச் செய்து விட்டு விடக்கூடாதா. நீங்கள் இப்பொழுது உங்கள் பாவத்தை அவருடைய சிலுவையின் அடிவாரத்தில் அறிக்கை செய்து விட்டு விட்டால் இன்றே - இப்பொழுதே - உங்களைத் தமது திரு இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து நித்திய ராஜ்ஜியத்திற்கு சுதந்திரவாளியாக்குவார். இதை எழுதுகிற நான் சில வருஷங்களுக்கு முன்பு பாவத்தின் நிமித்தமாக தேவனை விட்டுத் தூரம் போய் அவரை மறந்து தேவனுக்கு ஆகாதவனாக வாழ்ந்து வந்தேன். வாழ்க்கையின் சமாதானத்தை இழந்து நிர்ப்பந்தமான நிலையில் நித்திய மரணத்திற்கு நேராக விரைந்து செல்லுகையில் ஒருநாள் எனக்காக இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு தமது ஜீவனை தியாகமாக சிலுவையில் கொடுத்து பிரேதமாக தொங்கிய ஜீவாதிபதியாகிய என் அருமை நாதர் இயேசு என்னைச் சந்தித்து தமது இரத்தத்தால் கழுவி என்னைச் சுத்திகரித்து தமக்குப் பிரியமான பாத்திரமாக மாற்றினார். அந்த இயேசு இப்பொழுது உங்களைச் சமீபித்திருக்கிறார். இன்றுவரைக்கும் அவர் இரத்தத்தால் கழுவப்பட்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் இப்பொழுதாவது அவர் சமூகத்தில் பாவத்தை அறிக்கைச் செய்து விட்டு விலகி நித்திய ஜீவனை சுதந்தரிக்க ஆயத்தமா? கிறிஸ்து உங்களுக்காக நீச சிலுவையில் பிரேதமாக தொங்கியவர்.

15

"கிறிஸ்து மரணத்தை ஜெயித்து என்றைக்கும் ஜீவிக்கிற ஜீவாதிபதி"

இந்த உலகத்தில் எத்தனையோ மகான்கள் தோன்றினார்கள். தேவர்களென்று அழைக்கப்பட்டு வாழ்ந்து மறைந்த பல பெரியவர்களும் உண்டு. இவர்களெல்லாம் இந்த உலகத்தில் பிறந்தார்கள். கொஞ்ச காலம் வாழ்ந்தார்கள். பின்பு மரித்து மண்ணோடு மண்ணாய் அழிந்து போனார்கள். ஆனால் ஒரே ஒருவர் மரணத்தை ஜெயித்து என்றென்றும் ஜீவிக்கிறார். அவர்தான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து. ஆகவே வானத்தின் தூதர்கள் லூக் 24:6ம் வசனத்தில் "அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார்." என்று கூறியிருப்பதைக் காண்கிறோம். உலகத்தின் அத்தனை கல்லறைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஆனால் இறைவன் இயேசுவின் கல்லறை மாத்திரம் திறக்கப்பட்டிருக்கின்றது. இதை உணர்ந்த ஒரு பக்தன்.

"புத்தர், காந்தி, கென்னடி, நேரு உறங்குகிறார் கல்லறையில்.

நம் உன்னத தேவன் இயேசுவே மாத்திரம்"

உயரத்தில் ஜீவிக்கிறார்.

என்று பாடினான். இதை அறிந்த அன்பனாகிய யோவான் அவன் எழுதின வெளிப்படுத்தின தரிசனம் 1:18ம் வசனத்தில் இயேசுவானவரைக் குறித்து "மரித்தேன் ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று எழுதினான்.

இயேசு நாதர் இந்த உலகத்தில் ஊழியம் செய்தபோது ஒரு முறை "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் ஜீவனுடையதாயிருக்கும்; செத்ததானால் மிகுந்த பலன் கொடுக்கும்" என்று கூறினார். ஆம் ஒரு கோதுமை, அல்லது நெல் களஞ்சியத்தில் இருக்குமானால் அது ஜீவனோடுதான் இருக்கும் அதைக்

கொண்டு அதிக பிரயோஜனம் இராது, அதை அள்ளி நிலத்தில் விதைப்போமானால், அந்த கோதுமை அல்லது நெல்சாகிறது; செத்து ஒரு புதுப்பயிர் வளர்கிறது. ஏற்ற வேளையில் கை நிறைய தானியம் கிடைக்கிறது. அதை மறுபடி விதைக்கிறபோது. ஏராளம் தானியம், திரும்ப விதைக்கிற போது இடம் கொள்ளாத அளவு தானியம். அதுகளஞ்சியத்தில் இருக்குமானால் ஜீவனோடுதான் இருக்கும். அதைக்கொண்டு அதிகபயன் இராது; செத்ததானால் மிகுந்த பலன். கொடுக்கும். அவ்வாறே இயேசு நாதர் பலஸ்தீனாவில் பாலகனாகப் பிறந்து சில அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து அவ்வாறே மறைந்து போயிருப்பாரானால் இன்று சுவிசேஷம் இத்தனைக்கு பிரபல்ய மடைந்திராது. அவர் நமக்காக சிலுவையில் மரித்து. உயிர்த்து பரத்திற்கு சென்றபடியினால், இன்று சுவிசேஷத்தை அழிப்பதற்கு எழும்புகிற சக்தியெல்லாம் அழிகிறதே ஒழிய சுவிசேஷம் அழியவில்லை. நெப்போலியன், ஜூலியசீஸர், மகா அலக்ஸாண்டர் இவர்களெல்லாம் உலகமுழுவதையும் தங்கள் ஆளுகையின் கீழ் கொண்டு வந்து ஒரு குடையின் கீழ் ஆளுவதற்கு விரும்பினார்கள். ஆனால் அவர்கள் எண்ணம் சித்தி பெறவில்லை. இதை அறிந்த நெப்போலியன் போனபாட் இவ்வாறு சொன்னான். உலகமுழுவதையும் என் ஆளுகைக்கு கீழ்கொண்டு வந்து ஒரு குடையின் கீழ் ஆளுவதற்கு விரும்பினேன். என்வாஞ்சை நிறைவேறாமல் போயிற்று. கணக்கற்ற மக்களைக் கொன்று குவித்தேன், நாடுகளை வென்றேன், இப்பொழுதோ எல்லாவற்றையும் இழந்து அனாதையைப்போல் ஒரு கைதியாக நிற்கிறேன். இயேசுவே நீர் ஒரு போருக்கும் செல்லவில்லை. உமக்கென்று ஒரு ராணுவமும் இருந்ததில்லை என்றாலும் வையகமெங்கும் கோடிக்கணக்கான மக்கள் உம்மை தங்கள் இதய மன்னனாக சுமந்து செல்கின்றனர். இது எனக்கு விளங்காத விந்தையாக இருக்கிற தென்று கூறினான்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வேதம் மாத்திரம் கூறுகிற செய்தியல்ல; சரித்திரம் கண்ட உண்மை. இன்று அவருடைய திறக்கப்பட்ட கல்லறை அதற்கு சாட்சியாயிருக்கிறது. இயேசு மரித்தார். அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். நாற்பதுநாள் இந்த உலகத்தில் சுற்றித் திரிந்து தமக்குச் சித்த மானவர்களுக்குத் தரிசனமானார். பின்பு தனது சீஷருடைய கண்கள் காண நான் போய் உங்களுக்கு ஒருஸ்தலத்தை ஆயத்தம்

பண்ணின பின்பு மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் என்றார். இதைப்பார்த்து கலங்கி நின்ற சீஷருக்கு வானத்தின் தூதர்கள் "கலிலேயராகிய மனுஷரே, ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்" என்றார்கள்.

இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளையே, நாம் மரித்து மண்ணோடு மண்ணாய் போன ஒரு செத்த தெய்வத்தை ஆராதிக்க வில்லை. மரணத்தை ஜெயித்து என்றைக்கும் ஜீவிக்கிற ஒரு ஜீவனுள்ள தெய்வத்தை ஆராதித்து வணங்குகிறோம். எனவே கர்த்தரை தெய்வமாய் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளதென்று வேதம் கூறுகிறது. நமதாண்டவர் ஜீவிக்கிறார். நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் கவனிக்கிறார் என்ற நம்பிக்கையோடுதானா அவரைச் சேவிக்கிறீர்கள்? கிறிஸ்து மரணத்தை ஜெயித்து என்றென்றும் ஜீவிக்கிறவர்.

16

கிறிஸ்து சதாகாலமும் நம்மோடிருக்கிறவர்

நான் கர்த்தர் நான் மாறாதவர் என்ற நமதாண்டவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருப்பது மட்டுமல்ல, தம்மை நம்புகிற மக்களுக்கு எப்பொழுதும் துணையாயிருக்கிறார். எனவே யோசுவாவை நோக்கி பலன் கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் உன்னோடிருக்கிறேன் என்றார். ஆம் பிரியமான தேவனுடைய பிள்ளையே! கிறிஸ்து எப்பொழுதும் நம்மோடிருக்கிறவர். ஆகையால் தான் மத். 1:23 -ம் வசனத்தில் "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு

இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என்று தீர்க்கத்தரிசி முன்னறிவித்திருப்பதாகக் கூறியிருப்பதைக் காண்கிறோம். இம்மானுவேல் என்றால் அந்த வார்த்தையின் பொருள் தேவன் நம்மோடிருக்கிறார் என்பதாகும். இதைத் தான் கிறிஸ்து இயேசு இந்த உலகத்தில் மனிதனாகப் பிறப்பதற்கு உத்தேசம் எழுநூறு வருஷங்களுக்கு முன்னால் தீர்க்கத் தரிசனமாக ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 7:14-ல் கூறியிருப்பதைகக் காண்கிறோம்.

இன்று தேவன் இல்லையென்று கூறுகிற மதிகேடர்கள் சிலர் கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பைக் குறித்து இழிவாக பேசுகிறார்கள். இந்த உலகத்தில் எத்தனையோ விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். எத்தனையோ நூதனமான காரியங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். எந்த விஞ்ஞானியாவது ஒரு ஸ்திரீ கர்ப்பவதியாவதற்கு முன்பு இவள் இன்ன குழந்தையைப் பெறுவாளென்று முன்னறிவிக்க முடியுமா? இயேசு நாதர் பிறப்பதற்கு பலநூறு வருஷங்களுக்கு முன்பே தீர்க்கத்தரிசிகள் அவர் எங்கே பிறப்பார்? அவர் யாரிடத்தில் பிறப்பார்? அவர் எதையெல்லாம் செய்வார்? அவருக்கு என்னவெல்லாம் இந்த உலகத்தில் நடக்கும்? எப்படி மரிப்பார்? என்பதைக் குறித்து திட்டமும் தெளிவுமாக முன்னறிவித்தார்கள். அவர்கள் எப்படி முன்னறிவித்தார்களோ அப்படியே சகலமும் நிறைவேறிற்று. இன்று உலகத்தில் எத்தனையோ விஞ்ஞானிகள். தங்களைப் பகுத்தறிவாளர்கள் என்று மெச்சிக்கொள்வோரும் இருக்கிறார்கள். எந்த விஞ்ஞானியாவது, பகுத்தறிவாளியாவது ஒரு ஸ்திரீ பிறக்கும் முன்பே அல்லது ஒரு பெண் கன்னியாக இருக்கும் போதே, அவள் கர்ப்பமாவதற்கு முன்பே இன்ன வேளையில் இப்படி ஒரு ஆண் குழந்தையைப் பெறுவாள் என்று சொல்ல முடியுமா? அந்த குழந்தை பின்பு செய்கிற காரியங்களையும், அந்தக் குழந்தைக்கு நடைபெறுகிற சகல காரியத்தையும் சரியாக அறிவிக்க முடியுமா? கிறிஸ்துவைக் குறித்து சகலமும் முன்னறிவிக்கப்பட்டு, அதின்படி எல்லாம் நிறைவேறியிருந்தும் அவர் கன்னிப் பிறப்பைக் குறித்து இழிவாக பேசுகிறவர்கள் மெய்யாகவே மதிகேடர்களே.

நமக்காக இந்த உலகத்தில் பாலகனாகப் பிறந்த இயேசு நாதர் என்றென்றைக்கும் நம்மோடிருக்கும் இம்மானுவேல். ஆகவே

தான் இயேசு கிறிஸ்து மத். 28: 20ம் வசனத்தில் "இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார். இதை அறிந்த ஏசாயா "கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்" என்றான். எரேமியா ஆண்டவர் என்றென்றைக்கும் கைவிடமாட்டாரென்றான். நாகூம் கர்த்தர் நல்லவர் இக்கட்டு காலத்தில் அரணான கோட்டை தம்மை நம்பியிருக்கிற மக்களை அறிந்திருக்கிறார் என்றான். இஸ்ரவேலின் இராஜாவாகிய தாவீது "இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறவர். கர்த்தர் உன்வலது பக்கத்தில் உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும் இரவிலே நிலவானாலும் உன்னைச் சேதப்படுத்தாது" என்றான். பவுல் அப்படிப்பட்ட ஆபத்தில் நம்மைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இனிமேலும் தப்புவிப்பாரென்று அவரையே நம்பியிருக்கிறோம் என்றான். ஆம் பிரியமான கர்த்தருடைய பிள்ளையே! இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நமது தேவன் மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

பெற்றோர், பிள்ளைகள், புருஷன், மனைவி, உற்றார், உறவினர், நினைத்திராத வேளையில் நம்மைக் கைவிடுவார்கள். நேசித்தோர் பகைக்கலாம். நன்மை செய்தோர் தீமை செய்யலாம். நம்பி இருந்தோர் மோசம் போக்கலாம். ஆனால் இயேசுவோ என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.

நான் பிறந்தவுடன் என்னைப் பெற்ற என் தாயார் மரித்துப் போனார். கர்ப்பத்திலிருந்து விழும்போதே உம்முடைய சார்பில் விழுந்தேன் என்று அரசனாகியதாவீது பாடியிருப்பது போல ஆண்டவர் சார்பிலே விழுந்தேன். நான் பிறந்த நாலாவது அல்லது ஐந்தாவது நாள் என் தகப்பனார் என் தாயின் குடும்பத்தாரோடு சண்டை போட்டு என்னை விட்டுத் தூரம் போனார். தகப்பனும் தாயும் உன்னைக் கைவிட்டாலும் கர்த்தர் உன்னை சேர்த்துக்கொள்வார் என்றபடி இயேசு நாதர் எனக்கு நல்லவராக இருந்து அற்புதமாய் என்னைத் தாங்கி வழி நடத்தி வருகிறார்

என்னுடைய விசுவாச வாழ்க்கையில் நம்பினோர் எனக்கு மோசம் செய்ததுண்டு. நான் அதிகமாக நேசித்து அன்பு பாராட்டின

வர்கள் என்னை வெகுவாய்ப் பகைத்ததுண்டு, என்னுடைய கரத்தினால் நன்மை பெற்ற பலர் தாங்கள் பெற்ற நன்மைகளை எல்லாம் மறந்து எனக்கு எவ்வளவோ இக்கட்டு துன்பங்களைச் செய்ததுண்டு. ஆனால் என் அருமை நாதர் இயேசுவோ என்னை ஒருபோதும் கைவிடவில்லை. அவர் எப்போதும் எனக்கு துணையாயிருந்து அற்புதமாய், அதிசயமாய் என்னை அன்போடு வழி நடத்தி வருகிறார். அவர் எனக்கு ஆத்துமாவுக்கும், சரீரத்திற்கும் போதுமானவராயிருக்கிறார்.

இதை வாசிக்கிற தேவனுடைய பிள்ளையே! நீங்களும் இயேசுவில் அன்பு கூர்ந்து அவரைச் சார்ந்து ஜீவிப்பீர்களானால் அவர் உங்களுக்குப் போதுமானவர். யார் உங்களைக் கைவிட்டாலும், ஒருபோதும் உங்களை மறவேன் என்று வாக்களித்து மறந்து விட்டாலும், யார் உங்களைப் புறக்கணித்துத் தள்ளினாலும் அவர் ஒருபோதும் உங்களைப் புறக்கணிக்கமாட்டார். அவர் உங்களை அதிகமாய் நேசிக்கிறபடியினால். தாய் தன் பாலகனை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்றார். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பாலகனை மறப்பாளோ? அவள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என்று கூறுகிறார். கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? அவர் என்றைக்கும் உங்களைக்கைவிடாமல் எப்போதும் உங்களுக்குத் துணையாயிருக்கிற இம்மானுவேல்.

17

கிறிஸ்து மாறாத வல்லமையுள்ள தேவன்

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுள்ள நமது ஆண்டவர் தமது வல்லமையில் குன்றிப் போகவில்லை. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அவர் தமது வல்லமையில் மாறாதவராயிருக்கிறபடியினால் மல்கியா 3:6 வசனத்தில் "நான் கர்த்தர், நான் மாறாதவர் என்று கூறுகிறார். இதை அறிந்த இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது சங். 102:27 -ம் வசனத்தில் "நீரே மாறாதவராயிருக்

கிறீர், உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை '' என்று பாடினான். எபிரேயருக்கு எழுதின நிருபத்தை எழுதிய தேவனுடைய மனுஷனும் எபி. 1:12 -ம் வசனத்தில் '' நீரோ மாறாதவராயிருக்கிறீர் '' என்று எழுதினான். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எதிலே மாறாதவராயிருக்கிறார் ?

அவர் தமது அற்புதங்களில் மாறாதவர். இந்த உலகத்தில் இயேசு நாதர் மனிதனாகப் பிறப்பதற்கு முன்பும் அற்புதங்களைச் செய்தார். அற்புதங்களில் அவருக்கு ஒப்பானவர்கள் வேறு யாருமே இல்லை. அவர் நாமம் அதிசயமானவர். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, ஆரோன், எலியா, எலிசா என்பவர்களால் அவர் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறப்பதற்கு முன்பு அற்புதங்களைச் செய்து தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு நம்மையெல்லாம் இரட்சிப்பதற்காக இந்த உலகத்தில் அலைந்து திரிந்து ஊழியம் செய்து வந்த நாட்களிலும் அற்புதங்களைச் செய்தார். குருடர் பார்த்தார்கள், செவிடர் கேட்டார்கள், ஊமையர் பேசினார்கள், சப்பாணிகள் நடந்தார்கள், மரித்தவர்கள் உயிரோடு எழும்பினார்கள். அவர் மாறாதவராயிருக்கிறபடியினால் இன்றும் காலாகாலங்களில் தமக்குச் சித்தமான மக்களைத் தமது ஊழியத்திற்காக அழைத்து அதிகாரப்படுத்தி அற்புதங்களைச் செய்து வருகிறார். இதைக் கடந்த பதினேழு வருஷமாக நான் என் அனுபவத்தில் கண்டு ருசித்து தேவனை மகிமைப்படுத்தி வருகிறேன்.

மேலும் அவர் தமது பிள்ளைகளைப் போஷித்து பராமரித்து பாதுகாக்கிற அன்பில் மாறாதவராயிருக்கிறார்.

இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து மனிதனாகப் பிறப்பதற்கு முன்பு இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து வனாந்திரத்தில் மன்னாவாலும் காடை இறைச்சியாலும் அவர்களைப் போஷித்தார். மாராவின் கசந்த தண்ணீரை இனிப்பாக மாற்றினார். கன்மலையைப் பிளந்து தண்ணீரைக் கொடுத்தார். பின்பு தமது தாசனாகிய எலியாவை அரமனையின் அப்பத்தாலும் இறைச்சியாலும் காகத்தைக் கொண்டு போஷித்தார். சாரிபாத் விதவையைக் கொண்டு பஞ்சகால முழுவதும் அவனைப் போஷித்தார். சூரைச் செடியின் கீழ்

விசனத்துடன் படுத்திருந்த வேளையில் பரலோகத்தின் தூதனை அனுப்பி போஷித்தார். அவர் மாறுதவராயிருக்கிறபடியினால் இந்த உலகத்தில் மனிதனாகப் பிறந்து ஊழியம் செய்து வந்த நாட்களில் ஒருமுறை 5 அப்பத்தையும் இரண்டு மீன்களையும் வைத்து ஆயிரம் ஆயிரமான மக்களையும்; இன்னொருமுறை ஏழு அப்பத்தையும் சில சிறுமீன்களையும் வைத்து நாலாயிரம் பேரையும் போஷித்தது மட்டுமல்ல காணாவூர் கலியாண வீட்டில் தண்ணீரை ரசமாக்கி குறையை நிறைவாக்கினார். அவர் மாறுதவராயிருக்கிறபடியினால் இன்றும் தமது மக்களை அற்புதமாய்ப் போஷித்து பராமரித்து பாதுகாத்து வழி நடத்துகிறார். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு ஒருநன்மையும் குறைவுபடாது. கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். நீதிமான்களுடைய பிள்ளைகள் அப்பத்திற்கு இரந்ததைக் காணவில்லை என்று வேதம் கூறுகிறது. அவர் கூப்பிடுகிற காக்கைக்குஞ்சுக்கும் உணவளிக்கிறவர். அவர் தமது மக்களைப் போஷிப்பதில் மாறுதவராயிருக்கிறபடியினால் கடந்த 17 வருஷமாக என்னையும் என் குடும்பத்தையும் அற்புதமாய் போஷித்து வருகிறார்.

மேலும் அவர் பாவிகளை நேசித்து இரட்சிக்கிற தமது அன்பில் மாறுதவர். இந்த உலகத்தில் மனிதனாகப் பிறப்பதற்கு முன்பும் அவர் பாவிகளை இரட்சிக்கிறவராயிருந்தார். நம்மையெல்லாம் மீட்பதற்காக மனிதனாகப் பிறந்து இந்த உலகத்தில் ஊழியம் செய்து வந்த நாட்களிலும் பாவிகளைத் தேடிச் சென்று இரட்சிக்கிறவராக இருந்தார். எனவே எரிகோவின் வீதி வழியாக விரைந்து சென்று, அத்திமரத்தில் மறைந்திருந்த சகேயுவைப் பார்த்து, சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டுமென கூறி இரட்சித்தார். தமது பாதத்தைக் கண்ணீரால் நனைத்த பாவியான ஸ்திரீயைப் பார்த்து மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்துடன் போ என்று கூறி அவளை இரட்சித்தார். சமாரியா துரவண்டையில் மத்தியான உஷ்ணத்தையும் பொருட்படுத்தாமல் சென்று பாவியான ஸ்திரீயிடத்தில் தாகத்திற்குத் தா என்று கேட்டு அவளை இரட்சித்தார். விபச்சாரத்தில் கையும்மெய்யுமாய் கண்டு பிடிக்கப்பட்ட பாவியான ஸ்திரீயின் பாவத்தை மன்னித்து அவளை இரட்சித்தார். அவர் மாறுதவராயிருக்கிறபடியினால் இன்றும் பாவிகளை நேசிக்கிறார். எனவே ஏராளமான

பாவங்களுக்கு அடிமைப்பட்டு தேவனை விட்டுத் தூரம் போய் சமாதானத்தை இழந்து, சபைக்கு ஆகாதவனாக, குடும்பத்திற்கு ஆகாதவனாக. ஆண்டவருக்குப் பயனற்றவனாக, பாவியிலும் பிரதானமான பாவியாக, தேவன் இல்லையென்று துணிகரமாய் நாவினால் கூறின, என்னைத் தேடி வந்து, நான் விழுந்து கிடந்த உளையான பாவச்சேற்றிற்கு நேராக தமது இரக்கத்தின் கரத்தை நீட்டி என்னைத் தூக்கி எடுத்து, கன்மலையாகிய தன்னிலே நிறுத்தி, பொல்லாத துரோகியாகிய என்னைத் தமக்குச் சாட்சியாக்கினார்.

கர்த்தருடைய பிள்ளையே! இன்னும் நீங்கள் ஒருவேளை பாவத்திற்கு அடிமைப்பட்டு வேதனையோடு நாட்களைக் கழித்து வருகிறீர்களா? கவலைப்படாதிருங்கள். யார் உங்களைப் புறக்கணித்தாலும், இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் உங்களுக்காக மரணத்தை ருசி பார்த்தார். ஆகையால் உங்கள் ஆத்துமா அவர் பார்வையில் விலையேறப்பட்டது. இன்றே இப்பொழுதே அவர் சமூகத்தில் மெய்மனஸ்தாபத்துடன் உங்கள் பாவத்தை அறிக்கைச் செய்யுங்கள். தமது வல்லமையுள்ள இரத்தத்தால் உங்களைக் கழுவி சுத்திகரித்து உங்களையும் தமக்கு சாட்சியாக்குவார். பயனற்று, வெறுமையாய்க் கிடந்த கற்சாடியை இயேசுவிடத்தில் கொண்டு வந்தபோது, அந்த கற்சாடியில் மணமற்ற, ருசியற்ற, நிறமற்ற தண்ணீரை ஊற்றுமாறு கட்டளையிட்டார். அவர் கட்டளைப்படி தண்ணீரை ஊற்றின வேளையில் ருசியான ரசமாக மாற்றின ஆண்டவர் நீங்கள் பயனற்ற உங்களை அவர் கையில் ஒப்புக் கொடுக்கிறபோது தமது ஆவியால் நிறைத்து உங்களையும் ஒரு வல்லமையான சாட்சியாக்குவார்.

இதை எழுதுகிற நான் வேதாகமக் கல்லூரியில் சென்று வேத சாஸ்திரத்தைக் கற்றுத் தேர்ந்த ஒரு பெரிய வேத பண்டிதனல்ல, பொல்லாத பாவியாகிய நான் ஒருநாள் பயனற்ற என் உள்ளத்தை இயேசுவிடம் கொடுத்தபோது அவர் என்னைத் தமது ஆவியால் நிறைத்து அவருக்கொரு சாட்சியாக்கினார். அந்த இயேசு இன்றும் மாறாதவராயிருக்கிறார். இன்றே உங்களை அவருக்கு ஒப்புக் கொடுங்கள். உங்களைத் தமக்கு சாட்சியாக்குவார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் வல்லமையில் மாறாத தெய்வம்.

18

கிறிஸ்து சர்வ லோகத்தையும் நீதியாய் அரசாளுகிற ராஜாதி ராஜா

இந்த உலகத்தின் சகல இராஜாங்கங்களும் அழிந்து போகும் வல்லமையாய் உலகத்தில் ஆட்சி செய்து வந்த இராஜாக்கள் தங்கள் கிரீடத்தை கீழ்வைத்து விட்டார்கள். உலகத்தின் பெரும் பகுதியை அடக்கி ஆண்டு வந்த சாம்ராஜ்யங்கள் தங்கள் வல்லமையை இழந்து விட்டன. ஆனால் இயேசு நாதரோ சர்வலோகத்தையும் ஆளுகிற ராஜாவாய் இருக்கிற படியினால் தான் யோவான். 18:37ம் வசனத்தில் (அநீதிமானாகிய பிலாத்து) அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி அப்படியானால் நீ இராஜவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக நீர் சொன்னபடி தான் ராஜாதான் என்று சொல்லி இருப்பதைக் காண்கிறோம். இதை அறிந்த தேவனுடைய மனுஷனாகிய பவுலும் 1 தீமோ 6:15ம் 16ம் வசனங்களில் கிறிஸ்து இயேசுவைக்குறித்து "அவரே நித்தியானந்தமுள்ள ஏக சர்வாதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமை உள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்கிறவருமானவர்" என்று எழுதினான்.

பிரியமான தேவனுடைய பிள்ளையே! பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் ஒருமுறை ஒரு சொப்பனம் கண்டான், அந்த சொப்பனத்தில் ஒரு சிலையைப் பார்த்தான். அந்த சிலையின் தலைபசும் பொன்னும் அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும் அதின் வயிறும் அதின் தொடைகளும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதிஇரும்பும், பாதிகளிமண்ணுமாயிருந்தது. ராஜா பார்த்துக் கொண்டிருக்கும்போதே கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல்பெயர்ந்து உருண்டுவந்தது. அது அந்த சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. சிலையை மோதிய கல்லோவென்றால்

ஒரு பெரிய பர்வதமாகிப் பூமியை யெல்லாம் நிரப்பிற்று. (தானி. 2:32-35) இந்த சொப்பனத்தின் கடைசிபாகத்தில் குறிப்பிட்டுள்ள பாதி இரும்பும், களிமண்ணும் மான பாதங்கள்தான் தற்பொழுது காணப்படுகிற அரசாங்கங்களுக்கு அடையாளங்களாக இருக்கின்றன. இரும்பும், களிமண்ணும் ஒன்று சேராது. ஆம் இன்று நமது நாட்டை எடுத்துக் கொண்டாலும், வல்லரசுகளை எடுத்துக் கொண்டாலும் ஒன்றிற்கொன்று கொள்கைகளில் சம்பந்தமில்லாத நாடுகள் ஒன்றோடொன்று ஒப்பந்தங்கள் செய்து கொள்கிறது. கட்சிகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொள்கின்றன. இப்படி இருக்கையில் அந்த சிலையின் பாதங்களை ஒரு கல் புரண்டு வந்து நொறுக்கிற்றே அந்த கல்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

ஆம் அருமையானவர்களே! இயேசு சீக்கிரம் வருவார். அவர் தமது வருகைக்கு முன்னடை யாளமாகச் சொல்லிச் சென்ற சகல காரியங்களும் ஒவ்வொன்றாக நிறை வேறிக் கொண்டிருக்கின்றன. ஒரு வேளை நமது ஜீவிய நாட்களிலேயே கிறிஸ்துவின் ரகசிய வருகையைக் காண்போம். ஆண்டவர் நினையாத வேளையில் வருவார். தமது ரகசியவருகையில் தமது மணவாட்டியாகிய சபையைத் தன்னோடு சேர்ப்பார். மத்திய ஆகாயத்தில் ஏழு வருஷம் தன் மணவாட்டியாகிய சபையோடே இருப்பார். பின்பு ஆயிரம் வருஷம் இந்த உலகத்தை ஆளுகை செய்வார்.

கிறிஸ்துவின் ஆளுகை நீதியும் சமாதானமும் நிறைந்த ஆளுகையாக இருக்கும். கிறிஸ்துவின் ஆளுகையில் அநீதி இராது. லஞ்சம் ஊழல் இராது, சண்டைகளும் சச்சரவுகளும் இராது. அதைக் குறித்து தான் ஏசாயா 11:6-9 வரைக்குமுள்ள வசனங்களில் மிகவும் அருமையாகக் கூறியிருக்கிறான். அருள்நாதர் இயேசுவின் ஆளுகையில் ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும்; புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும்; அவைகளின் குட்டிகள் ஒருமித்து படுத்துக் கொள்ளும், சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும், பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும் பால் மறந்த பிள்ளை கட்டு விரியன் புற்றிலே தன் கையை வைக்கும்

என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் என்று முன்னறிவித்தான்.

பிரியமான தேவனுடைய பிள்ளையே! சமாதான பிரபுவாகிய இயேசுவின் ஆளுகை எவ்வளவு அதிசயமான ஆளுகை என்பதைப் பார்த்தீர்களா? ஆம் கிறிஸ்துவின் ஆளுகையில் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை. அந்த ஆளுகையில் அவரோடு வாசம் செய்யும் மக்கள் எவ்வளவு பாக்கியம் நிறைந்தவர்கள்? கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து சர்வலோகத்தையும் ஆளுகை செய்யும் ராஜாதி ராஜா.

19

கிறிஸ்து சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கும் நீதியுள்ள நியாயாதிபதி

ʘ()ʘ()ʘ

மனிதன் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசியை விட வேறுபட்டவன். உலகத்தில் வாழும் மிருகங்களானாலும், பறவைகளானாலும், ஊர்வனவானாலும் கொஞ்ச காலம் வாழுகிறது. பின்பு மண்ணோடுமண்ணாய் அழிந்து போகிறது. ஆனால் மனிதன் அப்படிப்பட்டவன் அல்ல. உலகத்தில் பிறக்கிறான் கொஞ்சகாலம் வாழுகிறான் பின்பு மரிக்கிறான் மரணத்திற்குப் பின்பு தனக் கொரு வாழ்வுண்டென்று நம்புகிறான். தான் இந்த உலகத்தில் வாழ்ந்து வந்த போது செய்த ஒவ்வொரு கிரியைக்கும் தக்கபலனை பின்பு அனுபவிப்பான். இயேசு சர்வலோகத்தையும் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாய் வருவார். ஆகவே மத் 25:31-33 வரைக்கு முள்ள வசனங்களில் அருள் நாதர் இயேசுகிறிஸ்து "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங் கூட வரும்போது

தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்பனானவன் செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிப்பது போல அவர்களை அவர் பிரித்து செம்மறி ஆடுகளைத் தனது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவாரென்று கூறியிருப்பதைக் காண்கிறோம். அவர் சர்வஜனத்தையும் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாய் இருப்பதால் அப் 17: 31ம் வசனத்தில்''மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர்தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பின தாலே அந்த நிச்சயத்தைஎல்லாருக்கும் விளங்கப்பண்ணினாரென்று பவுல் எழுதினான் கிறிஸ்து உலகத்தை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாய் வருகிறபடியினால் IIகொரி5:10ம் வசனத்தில் ''ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப் படவேண்டுமென பவுல் எழுதினான். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமும் ஆதி. 18:25ம் வசனத்தில் சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யா திருப்பாரோ வென்றான். அன்பனாகிய யோவானும் வெளி 22:11ம் 12ம் வசனங்களில் ''அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும் பரிசுத்தமாகிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும், இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு வருகிறது" என்று எழுதினான். தேவனுடைய மனுஷனாகிய தாவீதும் சங். 96:13 -ல் அவர் வருகிறார். அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். அவர் பூலோகத்தை நீதியோடும் சகல ஜனங்களையும் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார் என்று எழுதினது மட்டுமல்ல தேவனுடைய மனுஷனாகிய பவுலும் எபி. 9:27 -ல் " அன்றியும் ஒருதரம் மரிப்பதும் பின்பு நியாயந்தீர்க்கப்படுவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறதென்று '' எழுதினான்.

மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். அவனவன் செய்கையின் பலன் அவனவன் தலையிலே விழும். நாமெல்

லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. பிரியமான தேவனுடைய பிள்ளையே! நீங்களும் நானும் ஒருநாள் இயேசுவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். கர்த்தர் - நாம் செய்த ஒவ்வொரு கிரியைக்குத்தக்கதாக நம்மை நியாயந்தீர்ப்பார். இன்று பாவத்திற்குத்தக்க தண்டனையைக் கொடாதபடி நம்மீது நீடிய பொறுமையாக இருக்கிற ஆண்டவர் நியாயாதிபதியாக வரும்போது அவர் சமுகத்தில் இரக்கத்தைக் காணவே மாட்டோம், வார்த்தையினாலும், செய்கையினாலும், தனித்த வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், அந்தரங்கமாகவும் வெளியரங்கமாகவும் செய்த ஒவ்வொரு பாவங்களுக்கும் தக்க தண்டனையை பெறுவோம். எனவே இன்றே மனந்திரும்பி பாவத்தைவிட்டு விலகி அவருக்குச் சாட்சியாக ஜீவிப்போம். அவர் மன்னிப்பதற்கு தயை பெருத்திருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கிறிஸ்து சர்வலோகத்தையும் நீதியாய் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி.

20

கிறிஸ்து நம்மை பரலோகத்தில் சேர்க்கிறவர்

பிரியமானவர்களே! நாம் இந்த உலகத்திற்குரியவர்களல்ல. இந்த உலகம் நமக்கு நிலையானதல்ல. அநித்தியமானது. இது நமக்கொரு சத்திர வாழ்வு. இதைப் படிக்கிற நீங்களானாலும் சரி, உங்களுக்கு இதை எழுதுகிற நானாக இருந்தாலும் சரி நினைத்திராத பிரகாரமாக இந்த உலகத்தை விட்டுக் கடந்து செல்ல வேண்டும். மரணம் நினையாத வேளையில் உங்களையும், என்னையும் இந்த உலகத்தைவிட்டு பிரித்துவிடும். நரகம் நமக்குரியதல்ல. அது பிசாசுக்குரியது. பரலோகம் நமக்குரியது. நாம் இந்த உலகத்தில் வாழுகிறபோது பாவத்தை அறிக்கை செய்து விட்டு விலகி ஆண்டவருக்கு சாட்சியாக ஜீவித்து நியாயத்தீர்ப்பில் குற்றமற்றவர்களாய் காணப்படுவோமானால் ஒருநாள் கர்த்தர் நம்மை, நமக்காக அவர் ஆயத்தப்படுத்தியிருக்கும்

பரலோகத்தில் சேர்ப்பார். எனவே மத். 25:34-ம் வசனத்தில்''அப்பொழுதுராஜா தனது வலது பக்கத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல்உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட ராஜ்ஜியத்தை சுதந்தரித்.துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி இருப்பது மட்டுமல்ல யோவான்14 2ம்3-ம் வசனங்களில் ''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். என்று இயேசுநாதர் கூறியிருப்பதைக் காண்கிறோம்.

பரலோகத்தை நினைக்கிறபோது என் உள்ளமெல்லாம் பூரிக்கிறது. பரலோகம் இரத்தினங்களால் கட்டப்பட்டிருக்கிறது. பரலோகத்தில் பக்கத்திற்கு மூன்றாக பன்னிரண்டு முத்து வாசல்கள் உண்டு. பரலோகத்தில் ஜீவஜல நதிகள் பாய்ந்து கொண்டிருக்கிறது. பரலோகத்தின் வீதிகளெல்லாம் சுத்த பொன்னினால் செய்யப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டு மாதமும் புதிய புதிய கனியைக் கொடுக்கக்கூடிய ஜீவ விருட்ச மரங்கள் பரலோகத்தில் உண்டு. பரலோகத்தில் துன்பமில்லை துயரமில்லை. அழுகையில்லை கண்ணீரில்லை. பசியில்லை பட்டினியில்லை. சூரியன் இல்லை சந்திரனில்லை. வெயில் கிடையாது உஷ்ணம் கிடையாது. பகல் கிடையாது இரவு கிடையாது. ஆலயம் இல்லை ஆராதனை இல்லை. எம்பெருமான் இயேசுவே எல்லாமாக இருக்கிறார். நான் இந்த உலகத்தைவிட்டு மறைந்து பின்பு கடைசி நியாயத்தீர்ப்பில் வலது பக்கத்துக் கூட்டத்தில் நின்று தேவன் எனக்கு ஆயத்தப்படுத்தியிருக்கும் பரலோக ராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பேன் என்ற நம்பிக்கையை தேவன் எனக்கு அளித்தார். எனக்கு மாத்திரமல்ல உங்களுக்கும் அளிக்க விரும்புகிறார். இதைப் படிக்கிற தேவனுடைய பிள்ளையே! இன்றுவரைக்கும் இந்த நிச்சயம் உங்களுக்கு இல்லாதிருக்குமானால், இன்றே பாவத்தை அறிக்கை செய்துவிட்டு விலகி, அவர் வசனத்திற்கும், சத்தியத்திற்கும் கீழ்ப்படிந்து, முடிவில் பரலோக ராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும் பாக்கியத்தை தேவன் உங்களுக்குத் தந்

EL BETHEL PUBLICATIONS

- எந்த இடங்களில் கன்வென்ஷன் ஊழியம் செய்ய விரும்பினாலும் நாம் ஆயத்தமாயிருக்கிறோம்.
- இந்த ஊழியம் எந்த சபைப் பிரிவையும் சேர்ந்ததல்ல. எந்த சபையையும்பிரிக்கும் நோக்கத்திற்காக நடத்தப்படுவதுமல்ல. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பை மக்களுக்கு அறிவிப்பதே எங்கள் நோக்கம்.
- வாழ்க்கையின் எந்தப் பிரச்சனைக்காகவும் ஜெபிக்க விரும்புகிறவர்கள் அடியில் குறிப்பிட்டிருக்கும் எங்கள் விலாசத்திற்கு எழுதினால் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.
- நாங்கள் மாதந்தோறும் வெளியிடும் "எல் பெத்தேல் செய்திகள்" என்ற மாதாந்திர தமிழ் பத்திரிக்கை. **"DAYS AHEAD"** என்ற மாதாந்திர ஆங்கிலப் பத்திரிக்கை படித்துப்பயனடையுங்கள்.
- "இயேசு கைவிடார்" -- **C 60, Casttee tapes** வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு புதன்கிழமை காலையில் 7-00 மணி முதல் 7-15 மணி வரை 49 **or** 31 -வது மீட்டரில் நாங்கள் வெளியிடும் "இயேசு கைவிடார்" வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு நன்மையடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எங்கள் அற்பமான ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

சகோதரன் & சகோதரி,
J. M. ரோஸ்பாண்டியன்,
எல் பெத்தேல் ஜெபவீடு,
தூத்துக்குடி - 3.

Tuticorin,
October 1980, Phone : 20264

எல் பெத்தேல் அச்சகம், தூத்துக்குடி 2.